3825

செந்தமிழ்

தொகுதி—74 டிசம்பர் 1980 பகுதி—4

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

பாண்டித்துரைத்தேவர் சிறப்பு மலர்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

ஆசிரியர் :
டி. பி. எம். பெரியசுவாமி

உள்ளுரை

—oOo—

எண்	பொருள்		பக்கம்
1.	சேரமரபு - பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர்	...	153
2.	சினம் —கவிஞர் எச். முஸ்தபா	...	158
3.	இடம்பற்றி வரும் மரபு —சு. அழகேசன்	...	159
4.	நான் கண்ட செந்தமிழ்ச் சங்கம் --புலவர். த. சுப்பையா	...	163
5.	கற்றறிதல் — ஒன்றா? இரண்டா? — பண்டித. புலவர் வை. தங்கமணி	...	165
6.	இலக்கியத்தில் இமயமலை —கு. சதாசிவன்	...	174
7.	ஒப்பிலக்கியம் என்றால் என்ன? —டாக்டர் வை. சச்சிதானந்தன்	...	186
8.	உரையாசிரியர்களின் உரைகளில் முரண்பாடுகள் —டாக்டர் மு மணி வல்	...	196
9.	வினையில் வரும் சாரியை —பா. மல்லிகா	...	206
10.	தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்	...	214
11.	ரொக்கப்பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்	...	215
12.	தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு	...	221

—oOo—

முன்னுரை

அன்புடையீர்! வணக்கம்.

மாடமலி மறுகின் கூடல் மூதூரில் பந்தய அரங்கில் நேற்றைய தினம் (4-1-1981) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு கடல் போலத் திரண்டிருந்த மக்கட் கூட்டத்தின் ஏகோபித்த கையொலிகளுக்கிடையே கோலாகலமாகத் தொடங்கப் பெற்றது. மாநில ஆளுநர் திருசாதிக்அலி தலைமை யேற்ற இந்நிகழ்ச்சியினை மலேசியா இலங்கை மொரிஷியஸ் நாடுகளைச் சேர்ந்த தமிழன்பர்கள் உளமர, வாழ்த்தினார்கள். ஈழத்தைச் சேர்ந்த திருவாளர்கள். ராஜதுரை அமிர்தலிங்கம் ஆகியோரின் கொண்டல் முழக்கத்தை மக்கள் பெரிதும் விரும்பிச் சுவைத்தனர் தோட்டத் தொழிலாளரின் ஈடிணையற்ற தலைவர் தொண்டமான் அவர்களின் எடுப்பான பேச்சும் சிறந்த முறையில் இருந்தது. டாக்டர் அஷர் என்ற ஆங்கிலேயர் யாரும் எதிர்பாராத வண்ணம் இனிய தமிழில் பேசி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்

இறுதியில் பேசிய தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். மதுரையில் புதிதாகத் தொடங்க இருக்கின்ற சங்கம் ஐந்தா, நான்கா என்கிற வேண்டாத விவாதத்தில் இறங்காமல் புதிய அமைப்பு 'உலகத் தமிழ்ச் சங்கம்' என்று அழைக்கப் பெறும் என்று கூறியது குறிப்பிடத்தகுந்தது. ஏதோ போட்டியாக ஒரு அமைப்பினை உண்டுபண்ணுவது போல் தோற்றுகின்ற இந்நிலையினையும் மாற்றி வேறு ஒரு பெயர் சூட்டுவ-வதற்கு இன்னும் காலதாமதம் ஆகவில்லை என்றே நாம் எண்ணுகிறோம். அட்சியில் உள்ள தலைவர்கள் போட்டிக்கும் விவாதத்துக்கும் இடம் கொடுக்காமல். ஆக்கபூர்வச் செயல்களுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்.

நகரின் முக்கியமான ஐந்து சாலைகளில் மிகப்பெரிய தோரண வாயில்கள் விழாவினை யொட்டி திறந்து வைக்கப்பட்டுள்ளன மேலூர் சாலையில் அமைந்துள்ள நக்கீரர் தோரண வாயில் திறப்பு நிகழ்சசிக்கு நமது சங்கச் செயலாளர் திரு டி.பி எம். பெரியசாமி அவர்கள் தலைமை-யேற்றார்கள். திருமதி. சத்தியவாணி முத்து அவர்கள் சொற்பொழி-வாற்றிய இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் ராணி அம்மையார் வந்தி-ருந்து சிறப்பித்தார்கள். நகரின் பல்வேறிடங்களில் பன்னிரண்டு அறிஞர்களின் உருவச்சிலைகள் திறக்கப் பெற்றுள்ளன

தமிழைப் போற்றினால்தான் மக்கள் மத்தியில் அரசியலைச் செல்லுபடியாக்கலாம் என்னும் இற்றைக் காலத்தே தமிழின் ஏற்றம் பற்றி யார் பேசினாலும் அதில் வியப்பில்லை. வெள்ளையராண்ட காலத்திலேயே தமிழ் வளர்ச்சிக்கென்று ஒரு நிரந்தரமான நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கிய பாண்டித்துரைத் தேவர் அவர்-களைப் போற்றுகின்ற முறையில. தேவர் அவர்களின் முழு உருவச் சிலையைத் திறந்த தமிழக முதல்வரை மனமாரப் பாராட்டுகிறோம்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, ஆய்வரங்கம் குறித்த செய்தி மடல் அடுத்த இதழில் வெளியாகும். வணக்கம். ப. அ.

சேர மரபு

— பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்

மருமக்கள் தாயம் :-

சேரவரசர் மருமக்கட் டாயத்தினர் எனச் சேரநாட்டில் இப்பொழுது சிலர்கூறி வருகின்றார்கள். 'மருமக்கள் தாயம்' பின்வந்ததாகும் குலத்தில் மைந்தர்களும் மைந்தர்கள் இல்லாவிடின் தம்பியருமே அரசாண்டு வந்திருக்கின்றனர் என்பது 'பதிற்றுப்பத்து' என்னும் நூலால் தெரியலாகின்றது.

இமயவரம்பர் நெடுஞ்சேரலாதன் என்பார், உதியஞ்சேரல் என்பார்க்கு வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற புதல்வர்.

இமயவரம்பிற்குப் பின்னர் அரசாண்டவர் அன்னார் இளவல் (தம்பி), பல்யானைச் செல்கெழு குட்டுவர்.

அதன்பின் சேரலாதர்க்கு வேளாவிக் கோமான் பதுமன்தேவி ஈன்ற புதல்வர், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலென்பார். (சேரலாதரென்றது இமையவரென்றும், நார்முடிச் சேரல் அவர்க்கு வேளாவிக் கோமான் பதுமன்தேவியினிடமும் செங்குட்டுவர் அவர்க்கே சோழன் மணக்கிள்ளியிடமும் பிறந்தவரென்பது சிலர் கொள்கை.)

பின்னர் அரசுக்கு உரிமை பூண்டவர், நெடுஞ்சேரலாதர் மகனார், செங்குட்டுவர். இவர் தம்பியார், இளங்கோவடிகள் (சிலப்பதிகார ஆசிரியர்) துறவு பூண்டார்.

அதன்பின் அரசு பூண்டவர், சேரர் செங்குட்டுவர்க்குத் தம்பி முறை உடையவரான ஆடுகோட்பாட்டுச் சேரலாதர். இவர் நெடுஞ்சேரலாதர் தேவியார் வேளாவிக் கோமான்தேவியிடம் பிறந்தவர். இவர் நார்முடிச் சேரலுக்கு உடன் பிறந்தவர்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதர் என்ற பெயர், தண்டகாரணத்து ஓர..ட்டைத் தம்மூர்த் தந்து தானாய் வந்தது.

அவர்க்குப் பின் அரசுரிமை பெற்றவர், செல்வக் கடுங்கோ வாழியாதான் இவர் தந்தையார் பெயர் விளங்கவில்லை பலர் பலவாறு கூறுவர்.

அதற்குப் பின் அரசுரிமை பெற்றவர், அவர்க்கு வேளாவிக்கோமான் பதுமன்தேவியிடம் பிறந்த பெருஞ்சேரலிரும் பொறை

அதன்பின் அரசுரிமை பெற்றவர், அப்பெருஞ்சேரலிரும் பொறைக்கு வேண்மாள் நந்துவஞ் செள்ளையினிடம் பிறந்த இளஞ்சேரலிரும்பொறை.

இவரே செங்கோற்பொறையர் என 'மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்' (பதிற். 9 - பதி.) என்பது பற்றிச் சிலர் கூறுவர் செங்கோற் பொறையர்க்குப் பின் அரசாண்டவர், சேரமான் பெருமாள் நாயனார்.

இவர் நாடு துறந்து கைலை போந்தமையால் பின்னுரிமையாளர் சேரர் குலத்தில் இலராயினார் என்றும், ஆகவே மருமக்களுக்கு அரச உரிமை கொடுக்கும் வழக்கம் தலைப்பட்டது என்றும் சிலர் கூறுகின்றனர். அவர்க்குப் பின்னும் *சேர அரசர்கள் பலர் மக்கட் டாய நெறி பற்றியே அரசாண்டு வந்திருக்கின்றன ரென்பது, சாசன ஆராய்ச்சியாளர் துணிபு. 'மருமான்,' 'மருகன்' என்ற சொற்கள்-சேரர்க்கு வழங்கப்படுவது காரணமாக அவர் மருமக்கட் டாயத்தினர் எனச் சிலர் கூறுவர். இப்பெயர்களுக்கு 'வழித்தோன்றல்' என்பதே பொருளாம். பண்டை உரையாசிரியர்களும் இவ்வுரையே தருகின்றனர். அன்றியும் இச் சொற்கள் பண்டையரசர்கள் பிறப்பைக் கூறியபின், அவர் வழித்தோன்றல் என்னும் பொருளிலே பிற்றையரசரைச் சுட்டி வழங்கப்பட்டுள்ளது. உம்பல், தோன்றல் முதலிய பெயர்களும் இப்பொருளில் வழங்கப்படுகின்றன. அவற்றிற்கும் 'மருமகன்' என்ற பொருளில்லை. 'மருகன்' என்பதற்கு மருமகன் என்ற பொருள், மருமகனும் வழித்தோன்றலாகையால் வந்ததாம். குட்டுவன் இரும்பொறைக்கு மகனார், இளஞ்சேரலிரும்பொறை எனப் பதிகத்துள் (பதிற். 9 - பதி.) தெளிவாகக் கூறியும், 'கொற்ற மெய்திய பெரியோர் மருக' (பதிற். 9 - 8) என அவரைப் புலவர் அழைக்கின்றார். 'குட்டுவன் பொறையர்க்கு மருக' என்ற பொருளில் அழைக்கவில்லை. பிற இடங்களிலும் முந்தைப் பெரியோர் புகழொடு படுத்தே இச்சொல் வழங்கப் பட்டுள்ளது. ஆகவே, 'மருமான், மருகன்' என்ற சொற்களால் சேரர் மருமக்கட் டாயத்தார் என்பது வலியுருது.

மருமக்கட் டாயம், நாஞ்சிக் குறவன் காலத்துக்குச் சிறிதுமுன் ஏற்பட்டதென்பர். சிலர் அவர் கூறுமாறு 'நாஞ்சிக்குறவன் பாண்டியர் கீழ்ச் சிற்றரசனாக இருந்து நாஞ்சினாட்டை ஆண்டு வந்தான். நாஞ்சினாடு பாண்டியர் கைப்பட்டிருந்தது. நாஞ்சிக் குறவன் இறந்த பின்னர் நாஞ்சினாட்டைச் சேரர் ஆளத் தலைப்படவே, பாண்டியர்க்கும் சேரர்க்கும் அந்நாடு பற்றி வழக்கு வந்தது. அப்பொழுது அந்நாட்டுக் குடிகள், தாம் சேரநாட்டைச் சேர்ந்தவர் என்றும், அரசர் குலம் போலவே தங்கள் குலமும் மருமக்கட் டயம் பற்றி வருவதென்றும் கூறும்படிச் சேரநாட்டு அரசியலாரால் வேண்டப்பட்டனர். அக்குடிகளும் அவ்வாறே வழக்குத் தீர்க்க வந்தாரிடம் கூறினர். அன்றுமுதல், மக்கட் டாயத்தைச் சார்ந்தவரான நாஞ்சினாட்டு வேளாளர், மருமக்கட் டாயம் தழுவினர்.

இக்கதை உண்மையாயிருப்பின் சேரர்குலம், நாஞ்சிக் குறவன் காலத்துக்கு முன்பே மருமக்கட் டாயத்தைத் தழுவியதென்பது பெறப்படும்.

ஒரு பொருளை நாம் உறுதியாகக் கருதலாம். மக்களிருக்கும் பொழுது, அரசுரிமை மருமக்கட்குச் செல்லாது. ஆதலால், பிற்காலத்தில் சேரர் குலத்தில் மக்கள் இலராயினாரென்றோ மக்களிருந்து அரசியலைத் துறந்தாரென்றோ கொள்ள வேண்டும். அவ்வாறான பின்னர் சேரகுல அரசியல் முந்தையரசருடைய உடன் பிறந்தாள் மக்களுக்குச் சென்றிருக்க வேண்டும். மூதாதையின் செல்வத்தை மகளுக்கு மகள் இல்லாதவிடத்து மகளுக்கு மகன் ஆள்வது முறைமையே யாகும்.

சிலர் நாயர்கள் என்பாருடைய அதிகாரம் அரசியலில் தலையிட்ட போது மருமக்கட் டாயம் உண்டாயிற்று என்பர். அங்ஙனமேல், இப்பொழுதைய அரசர்களும் 'குலசேகர கிரீடபதி' என்று தங்களைக் கூறிக் கொள்வதால், மக்கட் டாயம் பற்றியே முதன்முதல் ஒழுகியிருக்க வேண்டும் குலசேகரருடைய கிரீடத்தைக் தாங்கி ஆண்டோர் அவர்க்கு மாறாக ஒழுகியிருத்தல் முறையன்றாம். குலசேகரர் மக்கள் வழி பற்றி வந்தவர். அவர், தம் தந்தையார் திருடவிரதர்க்குப் பின் அரசாண்டவர்.

நாயர்கள் நாக நாட்டிலிருந்து வந்து சேரர்களின் படையில் சேர்ந்தவரென்று சிலர் கருதுகின்றனர் 'வைரா' (வைகை) என்னும் சொல்லின் 'ர' காரம் தமிழில் 'ய' காரமாகத் திரிந்து 'வையை' என்றானது போல 'நாரர்' என்ற சொல் 'நாயர்' ஆயிற்று எனக் கொள்ளலாமாயினும் 'நாயன்' என்ற சொல்லுக்குத் தலைவரென்றும், 'நாய்ச்சி' என்ற சொல்லுக்குத் தலைவி என்றும் பொருள் கூறப்படு-வதை நோக்க, சில சேனைத் தலைவருக்கு 'நாயர்' என்ற பெயர் கொடுக்கப் பெற்றிருந்ததென்று கருதுவதற்கும் இடமுண்டு. ஆனால். நாயனார்· நாய்ச்சியர்' எனப் பெரும்பாலும் கடவுளடியார்க்கே வழங்கப் பட்டு வருகிறது 'நாயகன் என்னும் சொல், பழைய நிகண்டுகளில் தலைவனென்னும் பொருளில் வரவில்லை பத்தர்தாம் தம்மை 'நாயி-னேன் என்று இழிவுறுத்திக் கூறுவதால் அவரைச் சுட்டி வந்த பெயர்' அவரது பத்தித் தலைமை நோக்கித் 'தலைவர்' என்னும் பொருளில் வழங்கத் தொடங்கியது போலும்! நாயர் என்பதை 'நாதன்' என்னும் வட சொல்லின் திரிபாகக் கொண்டால் 'நாய்ச்சியார்'க்கு இடமில்லாது போகின்றது. எனவே, 'நாகர் என்பதன் திரிபே 'நாயர்' ஆகல் வேண்டும். இன்றும் ',நாயர் படை' என்ற பெயரியது ஒருபடை திரு-வாங்கூரில் உள்ளது. அது படைஞர் கூட்டமேயன்றிப் படைத் தலைவர் கூட்டமன்று

இன்றைச் சேர நாட்டரசர்கள் பட்டம் ஏற்கும் போழ்து 'க்ஷத்திரியர்' ஆய் அரசுரிமைக்குத் தகுதி பெறும் நோக்கத்தோடு பொன்னாற் செய்யப்பட்ட பசுவின் வயிற்றிலிருந்து பிறந்ததாகச் சடங்கு செய்வதொரு வழக்கம் இருந்து வருகிறது

திருவாங்கூர் அரசரைப் போலவே கொச்சி அரசரும் மருமக்கட் டாயத்தைப் பின்பற்றியவராவர். இவர்களது அரசப் ·பெண்கள் அணிவது. வெள்ளாடை. நாயரென்னும் வகுப்பைச் சார்ந்த பெண்-களும் வெள்ளாடையே புனைந்து வருகின்றனர். திருவாங்கூர் அரசர் தேவியை 'அம்மைச்சி' என்றும், கொச்சியரசர் தேவியை 'நேத்தியா-ரம்மை' என்றும் வழங்குவர். சேர அரசர்கள் உயிர்நீத்தால் (அரசா) 'நாடு நீங்கினர்' என்றும், கொச்சியரசர்கள் உயிர்நீத்தால் (அரசர்) 'தீப்பட்டார்' என்றும் கூறுவது வழக்கம்

நாயர் வகுப்பார் மணத்தில், பெண்களுக்கு மங்கல நாண் சூட்டும் வழக்கம் ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முன் இருந்து வந்தது. அதற்கு 'கட்டு கலியாணம்' என்று பெயர், கட்டு

கலியாணத்தால் ஒரு பெண் ஒருவர்க்குரியள் ஆவதில்லை. அக்கலியாணம் தடை அறுப்பதற்காகப் பெண்ணின் சிறுவயதில் செய்யப்படுவது. பெண் பக்குவமான பின், 'புடைவை கொடை' என்னும் கலியாணம் பிறர் ஓர் ஆடவரால் நிகழ்த்தப்படும். அவர் பெண்ணிற்கு ஓர் வெள்ளாடையும் மேலாடையும் அளித்து மாலை சூட்டி அப்பெண்ணை மணஞ் செய்வர். அம்மணத்தின்போது, மீண்டும் மங்கல நாண் சூட்டும்வழக்கமில்லை. இவ்விரண்டாமவரே பெண்ணை மனைவியாகக் கொள்வதற்குரியவர். பெண்களுக்குத் தம் கணவரை நீக்கிவிட்டுப் பிற ஆடவர்க்கும் புடைவை பெற்றும் மீட்டும் மனைவியாவது நாயர்ப் பெண்களுக்குக் குற்றமன்று. ஆடவர்களுக்கும் மனைவியரை நீக்குவதற்கு உரிமையுண்டு. அவ்வாறு நீக்கின் ஆடவர்கள் அப்பெண்களுக்கும் அவர்களிடத்தில் தமக்குப் பிறந்த மக்கட்கும் வாழ்க்கைச் செலவுக்குச் சிறு தொகை அளிக்க வேண்டும். அத்தொகை சிறிது சிறிதாகவும் அளிக்கப்படலாகும். நாயர்ப் பெண்கள் பிற சாதி ஆடவரையும் புடைவை பெற்று மணந்து கொள்ளலாம் நாயர்ப் பெண்கள் பார்ப்பாரை மணப்பது பெருவழக்கிலிருந்தது. பிறர் மணப்பின், நாயர்ப் பெண்களிடத்தில் பிறக்குங் குழந்தைகட்குத் தந்தை செல்வத்தைப் பெறும் உரிமையில்லாதிருந்தது ஆனல். இப்போதைய அரசாங்கச் சட்டப்படி நாயர்ப் பெண்களுக்குக் கணவருடைய செல்வத்துக்கும் குழந்தைகட்குத் தந்தையருடைய செல்வத்திற்கும் மக்கள் வழியார்க்கு உளதாகிய உரிமையுண்டு. ஆதலால், பிற சாதி ஆடவர் நாயர்ப் பெண்களை மணக்கும் வழக்கம் மிகக் குறைந்துவிட்டது. நாயர்களைச் 'சூத்திரர்' என்றும் கூறுவர்

மக்கட் டாயத்தினரிடையே நிச்சய தாம்பூலச் சடங்கின்போதும் மணத்தின்போதும் கணவன் பெண்ணுக்குச் சேலை உய்க்கும் வழக்கமுண்டு. ஆனால், அச்சேலை தனி வெண்சேலையா யிராது. வெண்புடவை மக்கட் டாயத்தாருள் கைம்பெண்கள் மட்டுமே அணிவர். மருமக்கட் டாய நாஞ்சினாட்டு வேளாளப் பெண்களுக்கும் பன்முறை மணஞ் செய்யும் உரிமையுண்டு. ஆயினும் அவர்களிடையே மணத்தின் போது மங்கல நாண் சூட்டுவதும் பிறவும் எல்லாம் மக்கள்வழிப் பெண்கள் வழக்கை ஒத்தே நிகழ்கின்றன. அவர்களும் வெண்புடைவை அணியார். இப்போதைய அரசாங்கச் சட்டப்படி மருமக்கட் டாயத்து ஒருவருடைய செல்வம் மருமக்கட்கு மட்டுமன்று; குடும்பத்தின் அண் பெண்களுட்பட அடுத்த எல்லா உறுப்பினர்கட்கும் ஆகும். மருமக்கட் டாயவேளாளர் பலரும் இக்காலத்துத் தம்செல்வத்தை மக்கட்கு உரிமை செய்தும், பெண்களை மறுமணம் செய்விக்காமலும் மக்கள்வழி மரபினரில் பெண் கொடுத்தும், பெண் பெற்றும் மக்கள் வழியினராய் மாறி வருகின்றனர்

சினம்

கவிஞர். எச். முஸ்தபா
— கீழக்கரை

சினமெனும் குணமொரு தீப்பொருளே!
சிதைந்திடும் சினமுறு முகஎழிலே!
சினமது மழைமுகில் போல வரும்;
திகழ்ந்தொளிர் இடத்திருள் சூழவுறும்.

கணத்தே சினத்தீ விளைகேட்டால்
காலம் பலவே வருந்துகின்றோம்.
மனத்தே நொந்தோ. கண் கலுழ்ந்தோ
மாற்றிச்சீர் செயல் ஆகாதே!

பொங்கும் அன்பார் அமைதிகைப்
புறாவின் சிறகென மென்மையதாம்;
விஞ்சும் சினத்தை வெல்பவனே
வேந்தன் தனினும் வல்லவனாம்!

உன்நினை விற்கொள் இளமையிலே
உறுதி யாகவே முயன்று
தன்சினம் வென்று தணையாள்வோன்
தயாளன், வீரன்; விவேகியே!

Eliza Cook எழுதிய ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம்.

இடம் பற்றி வரும் மரபு

சு. அழகேசன் எம். ஏ,
ஆய்வாளர், கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

தரல், வரல், செலல், கொடை என்ற நான்கு சொற்களும் தன்மை, முன்னிலை படர்க்கை என்னும் மூவிடங்களில் வரும் பாங்கினை இலக்கணிகள் சுட்டுகின்றனர் இச்சொற்கள் தத்தம் இட மரபினின்று மாறி வருதலையும் இவை பற்றிய இலக்கணிகளின் கருத்து முரண்பாடுகளையும் சுட்டிக் காட்டித் தெளிவு காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்

தொல்காப்பியர் கிளவியாக்கத்துள்ளும், எச்சவியலிலும் இச்சொற்கள் வருமாற்றை உணர்த்துகின்றார். செலவு வரவு, தரவு, கொடை என்ற நான்கு சொற்களும் தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூவிடங்களுக்கும் வரும் என்பதே டு [சேனா. 28], தருசொல், வருசொல் ஆகிய இரண்டும் தன்மை முன்னிலையிடத்து மட்டுமே வரும் என்றும், படர்க்கைக்கு வாரா எனவும் [சேனா. 29], செலவுச் சொல்லும் கொடைச் செரல்லும் படர்க்கைக்கே வரும் [சேனா 30] எனவும் தொல்காப்பியர் கிளவியாக்கத்துள் சுட்டுகிறார் மேலும் ஈ, தா, கொடு போன்ற சொற்கள் உபயோகிக்கும் மாற்றை உணர்த்தும் தொல்காப்பியர், எச்சவியலுள் 'கொடு என்னுஞ் சொல் தன்மையிடத்து வருகின்ற நிலையையும் பேசுகின்றார் [சேனா. 448] இதற்கு உரையாசிரியர் சேனாவரையர், 'தன்னைப் பிறனொருவன் போலக் கூறும் கருத்து வகையால் தன்னிடத்துச் செல்லும்' [சேனா. 448] எனக் கருத்துத் தெரிவிப்பர்.

இலக்கண விளக்கமும், தொல்காப்பியரை அடியொற்றித் தரலும் வரலும் தன்மை முன்னிலையிலும், கொடையும் செலலும் படர்க்கையினையுஞ் சென்று பொருந்தும் எனக் கூறும் [இலக். விளக். 301]

உதாரணம்:-

எனக்குத் தந்தான், நினக்குத் தந்தான் — தரல்
என்னுழை வந்தான், உன்னுழை வந்தான் — வரல்
அவன்கட் சென்றான் — செலல்.
அவற்குக் கொடுத்தான் - கொடை.

தரல், வரல் எனும் இச்சொற்கள் படர்க்கைக்கும் மயங்கி வருதலை உரையாசிரியர்கள் சேனாவரையரும் [29], நச்சினார்க்கினியரும் [29], 'பெருவிற லமரர்க்கு வென்றி தந்த' [புறம் 55], 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது [அகம்.36] என்ற எடுத்துக் காட்டுக்களைத் தந்து உணர்த்துவர் இளம்பூரணரோ, ஈண்டு செல்லும் என்னும் சொல்லால் சொல்லப்படுவதனை வரும் என்னும் சொல்லானும், கொடுக்கும் என்னும் சொல்லாற் சொல்லப் படுவதனைத் தரும் என்ற சொல்லானும் சொல்லுப [30] எனக் கூறி மறுப்பர். இதனை இடவழு எனக் கல்லாடனாரும் வைத்துக் கொள்ளுவர்

இலக்கண நூற்களான நன்னூல் [381], தொன்னூல் விளக்கம் [122], முத்து வீரியம் ஆகிய மூன்றும் தரல், வரல் என்ற சொற்கள் தன்மை முன்னிலைக்கு மட்டுமன்றிப் படர்க்கைக்கும் வரும் எனச் சுட்டுகின்றன. உரையாசிரியர் சிவஞான முனிவரோ படர்க்கைக்கு செலவும் கொடையும் சிறந்தும், தரவும் வரவும் சிறப்பின்றியும் வருகின்றன [நன் 381] எனப் பகர்வர்.

ஆனால் எல்லா இலக்கணிகளுமே செலவும். கொடையும் படர்க்கை யொன்றையுமே சாரும் என்பதில் ஒருமித்துக் காணப்படுகின்றனர் [தொல்30; நன் 381; இலக். விள. 301; தொ. விள 122; மு. வீ 64]. தொல்காப்பிய உரையாசிரியர் தெய்வச் சிலையார் நான்கு சொல்லும் மூன்றிடத்து வரும் எனக் கூறுவர் கூறும் உதாரணங் காட்டி அவை வழுக் காத்தவாறு என்ற கருத்தைத் தருகின்றார் [தெய். 28].

ஆனால் இந்நான்கு சொற்களும் இலக்கணிகளின் கருத்து முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டு மூன்று இடங்களிலும் வருதலைச் சங்க இலக்கியங்களில் அதிகம் காணலாம்.

(1) தரல்:-

(1) தன்மைக்கு வரல்:-

'முயல் சுட்ட ஆயினும் தருகுவேம்' [புறம் 319 - 8].

(2) முன்னிலைக்கு வரல்:-

'குடி புறந் தருகுவை' [புறம் 36—33].

(3) படர்க்கைக்கு வரல்:-

'மாட மதுரையும் தருகுவன்' [புறம் 32—5]

(2) செலவு:-

(1) தன்மையிடத்து வரல்:-

'கடுமான் தோன்றல்! செல்வல் யானே' [புறம் 162—7].

(2) முன்னிலையிடத்து வரல்:-

'நில்லாங்கு நில்லாங் கிவர்தர லெல்லா நீ
நாறிருங் கூந்தலார் இற்செல்வாய்' [கலி 95—1: 2]

(3) படர்க்கையிடத்து வரல்:-

'... ... ... எறிந்தோர்
எதிர் சென்று எறிதலும் செல்லான்;' [புறம் 301—8: 9].

(3) வரவு:-

(1) தன்மைக்கண் வரல்:-

'நன்மார்பு அடைய முயங்கி மென்மலக்
கண்டனம் வருகம்' [நற் 182—6: 7].

(2) முன்னிலைக்கண் வரல்:-

'... ... ... நீயே
என்னுள் வருதியோ நல்நடைக் கொடிச்சி
முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல' [நற்.82—2:4]

(3) படர்க்கைக்கண் வரல்:-

'கடும்பாட்டு வருடையொடு தாவன உகளும்
பெருவரை நீழல் வருகுவன்' [நற் 119—7:8]

(3) கொடை:-

(1) தன்மைக்கண் வரல்:-

'இன்னுயி ராயினுங் கொடுக்குவென் [புறம். 73—4]

(2) முன்னிலைக்கண் வரல்:-

'எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே' [புறம். 163—7]

(3) படர்க்கைக்கண் வரல்:-

'புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் [புறம் 182—5:6]

இவ்வாறு இலக்கியங்களில் மட்டுமன்றி இந்நான்கு சொற்களும் மூன்று இடங்களிலும் பயின்று வருதலைப் பேச்சு வழக்கில்-குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திருச்சி மாவட்ட மக்கள் மத்தியில் இன்றளவும் இயல்பாகவே காணலாம்.

உதாரணம்:-

எனக்குத் தந்தது! உனக்குத் தந்தது அவனுக்குத் தந்தது தரல்.
என்னிடம் வந்தது! உன்னிடம் வந்தது! அவனிடம் வந்தது வரல்
எனக்குச் சென்றது! உனக்குச் சென்றது! அவர்க்குச் சென்றது – செலல்.
எனக்குக் கொடுத்தது! உனக்குக் கொடுத்தது! அவர்க்குக் கொடுத்தது- கொடை.

எனவே இந்நான்கு சொற்களும் மூன்று இடங்களுக்கும் வரும் என்பது துணிபு.

நான் கண்ட செந்தமிழ்ச் சங்கம்

— புலவர் த. சுப்பையன்
குசிலியம்பாறை.

திங்கள் மரபிடை வந்த பாண்டியர்
வேத புராணம் விளம்பிதி காசம்
கண்டயிம் மதுரை கொண்டது பெருமை.
அங்கயற் கண்ணியோ டமர்ந்திடும் அழகன்
துங்கமா சோம சுந்தரன் தந்திடும்
குங்கும நிறத்தன் குமர வேலன்
ஏற்றிய தீப ஒளியெனும் சங்கம்
ஆற்றிட தொண்டுகள் அமர்ந்தனர் புலவராய்
முத்தமிழ்க் கலைகளை இத்தரை வியந்திட
வித்தகர் பாண்டியர் விரும்பியே காத்தனர்;
மங்காப் பாண்டியர் மரபிடை வந்த
சுந்தர பாண்டிய னாகப் பிறந்த
மதிவளர் முடியணி மகேச னாரும்
இம்மா மதுரை எம்மா நிலத்தினும்
நன்னெறி யுற்று நானில வளங்களும்
கற்பகக் காவெனக் கனிந்து சிறந்திட
மங்கை அங்கயற் கண்ணியை மணந்து
செங்கோ லோச்சிய சீர்சால் சிறப்பை
மங்காத் திருவிளை யாடல் செப்பும்.
முத்தமிழ் முழங்கிய வித்தகர் போற்றிய
சித்தம் களிசெய் செந்தமிழ்ச் சங்கம்
நாற்பத் தொன்பதின் நனிசிறந் தோங்கிய
புலவ ரேற்றைப் பொன்னெனப் போற்றி
நாவலந் தீவின் நாயக மாயது.
சங்கம் மருவிய தண்டமிழ்ப் புலவரும்

வங்கம் செலுத்தி வளநா டுகண்ட
பங்கமில் வேந்தர் மூவரும் பழியிலாத்
தமிழால் உறவு கொண்டனர். சங்கமோ
அமிழ்தம் பிறந்த அழகுரு கலைகளைத்
தமிழால் தானம் தரணிக் களித்தது.
அன்றைய சங்கம் இன்றும் உளதெனக்
கருதும் படிக்குக் காலத் துதவிய
நாயகன் முத்தமிழ்ப் புரவலன் வித்தகன்
ஏசாச் சிறப்பின் எங்கள் கோமான்
மறவர் குலத்துதி மாண்புறு காவலன்
நான்காம் சங்கம் நலனுற நாட்டிய
தோன்றல் செம்மல் தூய அன்புரு
முகவைப் பாண்டி முத்தமிழ்த் துரையைச்
சந்திர சூரியர் தங்கிடு நாள்வரை
இந்த நாநிலம் என்றும் நினைத்திடும்!
மதுரைக் கணிகலன் மதிப்புறு சங்கமே!
சங்கம் வளர்த்திடும் பைந்தமிழ்ப் பயிராம்
‘‘செந்தமிழ்’’ இதழைச் சிந்தையி லிருத்தி
நண்ணும் சேயினை எண்ணும் தாயெனக்
கண்ணுள் மணியெனக் கருத்துடன் போற்றல்
தமிழருக் குற்ற தனிச்சிறப் பாமே!.

"கற்றறிதல் - ஒன்றா? இரண்டா?"

பண்டித புலவர் வை. தங்கமணி எம். ஏ.,

உலகம் உவந்து தங்கள் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்து மனமாசகற்றும் மாமருந்து கிட்டியது எனக் கற்றுணர்ந்து போற்றிப் புகழும் வான்புகழ் வள்ளுவன் தந்த தமிழ் மறைக்குத்,

''தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பகுதி பரிமே லழகர் திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லை யுரைசெய்தார் இவர்'

என்னும் பழம் பாடலால் பதின்மர் உரை இருந்ததாக அறிகிறோம்.

இச்சீர்சால் குறளின் நடுநிற்கும் பொருட்பாலில் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்ற மூன்று இயல்களையும் உள்ளடக்கியுள்ளார். அங்கவியலில் அமைச்சு என்ற அதிகாரத்திலுள்ள இரண்டாவது குறளில் காணும் 'கற்றறிதல்' என்ற சொல்லே ஈண்டு கட்டுரைக்குத் தலைப்பாக அமைந்துள்ளது

''வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.''—

திருக்குறளுக்குப் பதின்மர் உரைஎழுதியுள்ளனர். என்றாலும் இப்போது கிடைத்திருப்பது ஐவர் உரையே. அந்த ஐவரும் இந்தக் குறட்பாவிற்கு எவ்வெவ்வாறு உரைவகுத்துள்ளனர் என்பதை நோக்குவோம்.

பரிமேலழகர்:

வினை செய்தற்கண் அசைவின்மையும் குடிகளைக் காத்தலும், நீதி நூற்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும் முயற்சியும், மேற்சொல்லிய அவ்வங்கங்கள் ஐந்துடனே திருத்தம் உடையவனே அமைச்சன் ஆவான் என்றவாறு பொருள் எழுதியுள்ளார்.

மேலும், அக்குறளுக்கு விளக்கம் எழுதும்போது எண்ணொடு நீண்டது 'அவ்வைந்து' எனச் சுட்டு வருவிக்க; இந்நான்கினையும்

மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுமாதலானும் அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறுதற்கும், இனி இதனை ஈண்டு எண்ணிய-வற்றிற்கே தொகையாக்கிக், குடிகாத்தல்' என்பதனைக் குடிப்பிறப்பும், அதனை ஒழுக்கத்தால் காத்தலும் எனப்பகுப்பாரும், 'கற்றறிதல்' என்பதனைக் கற்றலும் அறிதலும் எனப்பகுப்பாரும் உளர். அவர் உடன் என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடி' என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், 'குடி' என்பதனை ஆகுபெயர் ஆக்கியும் 'இடர்ப்படுப என்றும் விளக்குகிறார்.

மணக்குடவர் — பரிப்பெருமாள்:

அஞ்சாமையும், குடிகாத்தலும், இந்திரியங்களைக் காத்தலும், நூன் முகத்தான் அறிதலும், முயற்சியும் என்னும் ஐந்துங்கூட மாட்சிமைப்பட்டவன் அமைச்சன் ஆவான் என்றும் .

பரிதியார்:-

தறுகண் ஆண்மை, குடிகாத்தல், கல்வி அறிவுடைமை உத்தி-யோகம் என்னும் ஐந்து குணமுள்ளவன் மந்திரியாவான் என்றும் .....

காலிங்கர்:-

வன்கண்ணதாகிய தறுகண்மையும், தன் அரசன் கோற்கீழ் வாழும் குடிகளது வன்மை மென்மை வழக்கு அறிதலும், காத்தலாகிய நாடு காவலும் காடு காவலும் நாடிச் செல்லுதலும், கற்றறிதலாகிய பெரும் பொருள்நூல் கற்றுணர்ந்து அறிதலும், ஆள்வினை என்னும் அரசியல் முயற்சியும் அமைச்சியல் முயற்சியும் இவை ஐந்தும் ஒரு-தலைப்பட ஆராய்ந்தவன் அமைச்சன் ஆவான் என்றும் .....

மேலே கூறிய ஐவரும் உரை வகுத்துள்ளனர்.

இவ்வைவர் உரையிலும், பரிமேலழகர் உரையினைக் கூர்ந்து நோக்கின் அவர் உரை எழுதப் புகுந்த காலைத் திருக்குறளுக்குப் பலருடைய உரை இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. மேலும், இவர் காலத்தால் பிந்தியவர் என்று வரலாற்று ஆசிரியர்களும் கருதுகின்றனர்.

மணக்குடவரும், பரிப்பெருமாளும் காலிங்கரும் 'குடி காத்தலை' இரண்டாக்கினர்கள். பரிதியார் மட்டும் குடிகாத்தலை ஒன்றாக்கிக் 'கற்றறிதலை' இரண்டாக்கியுள்ளார். ஆனல், பரிமேலழகரோ 'எனப் பகுப்பாரும்', 'இடர்ப்படுப' என்றெல்லாம் கூறிமறுத்து, 'வன்கண்' குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை என்ற நான்கோடு முன்கூறிய, 'கருவியும், காலமும், செய்கையும், செய்யும் அருவினையும் மாண்ட தமைச்சு' என்ற குறளில் கூறப்பட்டுள்ள நான்கு அங்கங்களையும் ஒன்றாக்கி இவ்வைந்துடன் மாட்சிமைப் பட்டவன் அமைச்சன் என்று விளக்குகிறார்.

'சிற்சில குறளுக்குப் பரிமேலழகர் வடநூல் மேற்கோள் காட்டு-வதிலிருந்து அவர் வடமொழியையும் கற்றுத்துறை போயவர்' என்றும்,

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த உரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த உரையாமோ தெளி."

என்றும்,

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை — ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலந் தரம்."

என்றும்,

'விரைந்தார் அலங்கல் திருவள்
ளுவர்முன்னம் வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொருள் நான்கும்
விளங்க நெறிப்புலவர்
உரைத்தார் பலரும் அதற்குரை
தன்னை உலகறியக்
கருத்தான் வகுத்துரைத் தான்கலை
தேரொக்கைக் காவலனே."

என்றும், தமிழ்ச் சான்றோரால் பாராட்டுதலுக்கு உரியவராய் அமை-கிறார் பரிமேலழகர். இத்தகு பெருமைக்கும், பாராட்டுதலுக்கும் உரிய இவர் மட்டுந்தான் மறுக்கின்றாரா? என்றால் இல்லை. ஏனை உரை-

யாசிரியரும் மறுக்கிறார்கள்; பாடபேதமும் கொண்டிருக்கிறார்கள். ஆனால், முன் எழுதிய உரையைத் தான் கண்டு கொள்ளாதவர்களைப்போல் பாட பேதமும் உரை மறுப்பும் எழுதியுள்ளார்கள். ஆனால், பரிமேலழகரோ அவ்வாறன்றி வெளிப்படையாகவே பாடபேதங்களையும் உரை விளக்கங்களையும் சுமார் அறுபஃதுக்கு மேற்பட்ட இடங்களில் மறுக்கிறார். அவ்வாறு மறுக்குமிடங்களில் சில காண்போம்.

'என்பாரும் உளர்' - குறள் : 26

'என்று உரைப்பாரும் உளர்' - 114

'பிறவாறு உரைப்பாரும் உளர்' - 290

'அஃது உரையன்மை அறிக' - 327, 334, 1011, 1103

'பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றிய வாறே உரைப்பார்' - 501

'இதற்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள உரைத்தார்' - 817

'உலகியிலை வியந்து கூறிற்றாக்குவாரும் உளர்' - 978

'என விரித்துரைப்பாரும் உளர்' - 1042

''இதனைத் தலைமகள் கூற்றாக்கி உரைப்பாரும் உளர்' (1151)

என்று மறுப்புகள் தந்து செம்மாந்து நிற்கும் பரிமேலழகர் ஏன் எண்ணோடு நீண்டது,' 'அவ்வைந்து' எனச் சுட்டு வருவிக்க என்று முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போட வேண்டும்?

வள்ளுவருக்கு இவ்வாறு முடிச்சுப் போடுதலோ, அன்றி முன் கூறியுள்ளேன் இனிக் கூற வேண்டுவதில்லை என்றோ! இனிக் கூறவிருக்கின்றேன் இங்குத் தேவையில்லை என்றோ! கூறும் வழக்கம் எக் குறளிலாவது காணப்படுகிறதா?

இங்கு எப்பொருள் பற்றி எந்த அதிகாரத்தில் கூறினாலும் அதனை மிக அழுத்தம் கொடுத்து அதுதான் உயர்ந்தது என்று வற்புறுத்திக் கூறும் வழக்குடையவர் வள்ளுவர்.

இவ்வாறு வற்புறுத்திக் கூறிய சிலவும், எங்கேனும் செவ்வெண் கொடுத்துப் பாடப்பட்டக் குறளில் 'மாட்டேற்று என்ற முறையில் பாடி இருக்கிறாரா? என்றும் சில எடுத்துக்காட்டுகள் மூலம் பார்ப்போம்.

முதலில் கருத்துகளுக்கு முதலிடம் கொடுத்த சில சான்றுகளைப் பார்ப்போம்.

'ஊழ்' என்ற அதிகாரத்தில் தான் எத்தகைய ஆற்றலில் செயல்பட்டாலும் ஊழ்தான் முன்னிற்கும் என்பதனை வலியுறுத்திக் கூறுமுகத்தான்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.'

380-ஆம் பாடலில் ஊழுக்கு வலிமை தந்து வற்புறுத்திய வள்ளுவர், ஆள்வினை உடைமை என்ற அதிகாரத்தில் முயற்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தற் பொருட்டு

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்" (குறள் : 619):

என்றும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்." (குறள் : 620)

என்னும் பாடலிலும் 'தெய்வத்தால் இயலாது என்று படினும் உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைக்கும்' என்றும்.

ஆள்வினை உடைமையாம் முயற்சியுடையவர் ஊழினையும் புறங்காணும் ஆற்றல் உடையவர் என்றும் கூறி முயற்சிக்கு இன்றி-யமையாமை நல்குவதைக் காண்க. மேலும்,

'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு
இரவின் இழிவந்த தில். (குறள் : 1066)

என்று கூறியவர்,

'இரக்க இரத்தக்கார் காணிற் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று' (குறள் : 1051)

என்றும், முன்னதில் தனக்கென்று இல்லாது 'ஆகாத்தோம்பல் பேரறம்' என்று நினைந்து. அவ்வவாவினைக் காத்திட நீர் வேண்டும் என்று இரப்பதுவும் இழிவாகும் என்று கூறியவர் 'இரக்க இரத்தக்கார் காணின்' என்றும் கூறுவதை நோக்கின் எங்கு எக்கருத்தைக் கூறி-னாலும் அங்கு அக்கருத்தே உயர்வுடையதென மிக அழகாகவும், அழுத்தம் கொடுத்தும் கூறும் தன்மை உடையவர் திருவள்ளுவர் என்பதை அறிகிறோம்

அதுபோல், எங்கெங்கு எண்ணிச் சொல்ல வேண்டுமோ அங்கெல்லாம் ஐயத்திற்கு இடமின்றி எண்ணி முடித்துக் காட்டுபவர் திருவள்ளுவர். எடுத்துக் காட்டாக சில நோக்குவோம்:

1. 'தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்' (குறள் 19)

2. 'சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்றைந்தின்
வகைதெரிவான் கட்கே யுலகு' (குறள் : 27)

3. 'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்' (குறள் . 35)

4. 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்து ஆறுஓம்பல் தலை' (குறள் : 43)

5. 'காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்' (குறள் : 360)

6. 'படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு' (குறள் : 381)

மேலே கொடுக்கப்பட்ட குறட்பாக்களை ஒருமுறை உற்று நோக்கினும் உண்மை புலனாகும். ஒன்றினை இன்னொன்றோடு சார்த்தியோ, வலிந்தோ, இழுத்தோ பொருள் கொள்க என்று கூறும் வழக்கம் வள்ளுவரிடம் இல்லை என்பதை ஒவ்வொரு கருத்தையும் அவ்வக் குறளிலேயே முடித்துக் கூறும் முத்தகச் செய்யுளாக்கிக் காட்டியுள்ளமையாலும் உணரலாம். 1330 திருக்குறளும் முத்தகச் செய்யுட்களே; குளகமல்ல.

இருந்தும்,

'கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு' (குறள் 631)

என்னும் குறளுக்கு விளக்கம் எழுதும் போது நான்கு அங்கங்கள் வெளிப்படையாகக் கொடுத்திருந்தும், 'இவை ஐந்தினையும் வடநூலார் மந்திரத்திற்கு அங்கம் என்ப' என்றும், ''வன்கண், குடிகாத்தல், கற்றல். அறிதல் ஆள்வினையோ; டைந்துடன் மாண்ட தமைச்சு'' என 632 - ஆம் பாடலில் வெளிப்படையாக ஐந்து எனச் செவ்வெண் கொடுத்திருந்தும் உரைவிளக்கம் எழுதும் போது வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை என இந்நான்கினையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டு மாதலானும் அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெற்றது என்றும் கூறுகிறார்.

இவ்வாறு நான்கினை ஐந்து என்றும், ஐந்தினை நான்கு என்றும் கூறி அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் ஏன் தொடர்பு படுத்துகிறார்?

வள்ளுவர் நோக்கம் யாது?

'கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு' (குறள் 631)

இக்குறளில் எண் கொடுக்காவிட்டாலும் நான்கு அங்கங்கள் அமைந்திருப்பதை ஒரு முறை படித்தால் வெளிப்படையாக உணரலாம்.

'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.' (குறள் 632)

இக்குறளில், 'ஐந்துடன்' என்று செவ்வெண் கொடுக்கப்பட்டிருப்பதால் இப்பாடலில் அமைந்துள்ள அங்கங்கள் ஐந்தும்,

'பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு.' (குறள். 633)

இக்குறளிலும் இத்தனை என்று எண் கொடுக்காவிட்டாலும் இதிலும் மூன்று அங்கங்கள் இருத்தலை உணரலாம்.

'தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.' (குறள். 634)

இக்குறளிலும் மூன்று அங்கங்கள் அமைந்திருப்பதைக் கவனிக்க.

'அறனறிந் தான்றமைந்த சொல்லால் எஞ்ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.' (குறள். 635-)

இக்குறளில் அமைந்திருக்கும் அங்கங்கள் இரண்டொடு பதினே-ழினையும் ஐந்து குறளில் அடக்கிக் கூறுகிறார். ஆனால் ஒன்றோ-டொன்று தொடர்புபடும்படிப் பாடி இருக்கிறாரா என்றால் இல்லை. இவ்வாறு தனித்தனிப் பொருள் முடிவு கூறும் 635 - ஆம் குறள் இறுதியில் பரிமேலழகரே இவை ஐந்து பாட்டானும் அமைச்சரது குணத் தன்மை கூறப்பட்டது என்று வள்ளுவரது எண்ணத்திற்கு மாறு-படாது உடன்பட்டு உரைவிளக்கம் எழுதியவர் ஏன் இரண்டாவது பாடல் இறுதியில் மாறுபட்டுக் கூறுவானேன்?

கற்றல், அறிதல் இரண்டல்ல ஒன்றெனக் கொள்ளுதலே வள்ளுவருக்கு உடன்பாடு என்றால் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என வெவ்வேறு அதிகாரம் அமைத்துப் பாட வேண்டிய அவசியம் என்ன? கற்றலையும். அறிவுடைமையையும் ஒன்றாக இணைத்துப் பாடியிருக்கலாம் அல்லவா? அவ்வாறு பாடவில்லையே! அவ்வாறு பாடாததன் நோக்கம் யாது? கற்றலும் அறிதலும் ஒன்றல்ல இரண்டு என்றுதானே இவை நமக்குக் காட்டி நிற்கின்றன.

வள்ளுவர்தான் கல்வி, அறிவுடைமை என்று தலைப்பிட்டுப் பிரித்துக் காட்டுகின்றாரா என்றால் இல்லை. பிறசான்றவர்களும் கல்விக்கும் அறிவுடைமைக்கும் வெவ்வேறுதலைப்பிட்டே பாடியுள்ளனர்.

நாலடியாரும் கல்வி, அறிவுடைமை, அறிவின்மை என்றும், முன்றுறையரையனாரும் (பழமொழி) தமது நூலில் கல்வி, கல்லாதார், அறிவுடைமை என்றும், தனித்தனித் தலைப்புக் கொடுத்துத் தத்தமது கருத்துக்களை அந்தந்த அதிகாரங்களில் பாடி இருத்தலை ஆராய்க.

இதனை நோக்குமிடத்து வள்ளுவர் கொண்ட கருத்தினையே நாலடியாரும், முன்றுறை அரையனாரும் கொண்டிருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது.

ஒருக்கால் வள்ளுவருக்கு உடன்பாடான கற்றலும், அறிதலும் பிறசான்றோரும் உடன்பட வேண்டும் என்பதல்ல. ஆனால், அக்கருத்-தினை உடன்பட்டுத் தத்தமது நூற்களில் பாடியுள்ளனர் என்றால் அக்கருத்து பற்றி யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்று தானே தெரிய வருகிறது.

இவ்வாறு வள்ளுவர் கருத்துக்குத் துணை நிற்பன போல நாலடியாரும் முன்றுறை அரையனாரும் அரண் செய்திருந்தும் பரி-மேலழகர் மட்டும் தன்மனம் போனபோக்கில் மாறுபட்டு உரை வகுத்-திருப்பது ஏன்?

(தொடரும்)

இலக்கியத்தில் இமயமலை

கு. சதாசிவன், M. A., M.Phil.
மதுரைப் பல்கலைக்கழகம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி ... ...

வரலாற்றுத் தொடர்பான செய்திகள் :

'அசைவிலாப் பொருட்களில் நான் இமாலயத்தைப் போன்றவன்' என்றார் ஸ்ரீ கிருஷ்ணர். Stha varanam Himalayah' **Bhagavad Gita :** Chapter X, 'Sloka: 25). மேலும் அவர் 'மலைச் சிகரங்களில் நான் மேரு' என்றும் கூறினார். (meruhsikhari namaham'. **Bhagavad Gita :** Chapter X, Sloka : 23). இமயமலையின் இத்தகைய பழம் பெரும் சிறப்பினை சிலப்பதிகாரத்தின், புகார்க் காண்டத்தில் வரும் சில அடிகள் உறுதிப்படுத்துகின்றன.

> ''பொதியில் ஆயினும், இமயம் ஆயினும்
> ... ...
> ... ...
> நடுக்கு இன்றி நிலை இய என்பது ...'' [1: (2) : 15-18].

இமயமலை நடுக்கற்றது; அசைவற்றது; அழிவற்றது. ஏனெனில் புராணிகக் கருத்தின்படி ஆங்குத் தேவனும் தேவரும், அறிஞரும் அந்தணரும், முனிவரும் குடிகொண்டுள்ளனர். ஈங்குக் கடவுள் உறைகின்றார் என்ற செய்தியைக் 'கடவுணிலை இய கல்லோங்கு நெடுவரை' என்ற பதிற்றுப்பத்து அடி விளக்கும். குவடுகளாய் உயர்ந்துள்ள பக்க வரைகளைக் கொண்டது, இம் மலை என்று மணிமேகலையில் வரும் 'சிமைய மோங்கிய விமையமால் வரைத்' என்ற அடி சுட்டுகின்றது. இதன் கண்ணிருந்து புறப்படும் கங்கையைப் பெரும்பாணாற்றுப்படை :

> ''வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
> பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
> பெருநீர் போகும் இரியல் மாக்கள்'' [429 -32].

என்று புகழ்ந்து பாடிற்று. அது போன்று நற்றிணையும் அந் நதியின் பெருமிதமான தோற்றத்தை,

> ''ஞெமையோங்கு உயர் வரை இமயத்து உச்சி
> வா அன் இழி தரும் வயங்கு வெள் அருவிக்
> கங்கையம் பேர்யாற்றுக் கரையிறந்திழி தருஞ்'' [369 : 7-9]

என்ற சொற்களால் சிறப்பித்துக் கூறிற்று.

இதன்கண் செடிகளும், கொடிகளும் பொலிவுடன் காட்சியளித்தன என்று அகநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகின்றது. 'இமயக் கானம்' என்ற கூற்று இதனைச் சுட்டுவதே.

'சுடர்விடு பொன்னுங், 'வயிரச் சாதியும்', 'வரையிற் பிறந்த வயிரம்', 'விளங்கொளி வெள்ளியும்' இம்மலையிடத்துப் பிறந்தவை. இதன் அடிவாரங்களில் மயில் நடமாடிற்று என்று நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கை ஆழ்வாரும் [1: 2 1] தேவாரத்தில் சம்பந்தரும் (250 பதிகம்) கூறினர். இச் செய்தியைப் பெருங்கதையில் வரும் 'மயிலாடு சிமயம்' என்று தொடங்கும் அடி உறுதிப்படுத்திற்று.

இம்மலையோ அளவிட்டுக் கூறவியலாச் சிறப்புகளை உடையது. அசைவற்றது; நீண்டது; உயர்ந்தது; பருத்தது; பெரியது. வானை எட்டும் சிகரங்களை யுடையது; செல்வச் செழிப்புடையது; மழை மிகுந்தது; பாதுகாப்பாய் அமைந்தது. இவ்வளவு இயற்கையின் சிறப்புகளைக் கொண்ட இம்மலை மன்னர்களின் உள்ளுணர்வையும், உள்ளுரத்தையும் கிள்ளிவிட்டது என்றால் மிகையாகாது. தமிழ் மன்னர்களும் இதற்கு விதி விலக்கல்லர் தமிழ் மன்னர்களும் இம் மலையைத் தம் வடவெல்லையாகக் கொள்ள முயன்றனர். தம் நாட்டு இயற்கைச் செல்வமாக்கவும் விரும்பினர். அதனையும் உள்ளிட்ட பரந்த பேரரசு படைக்கத் திட்டமிட்டனர்.

இம்மலை ஓர் உவமைப் பொருள்: அறிஞரை ஆதரித்த மாமன்னர்களைப் புகழுமிடத்து புலவர்கள் இமயமலைக்கு ஒப்பான உயர்வும், நீண்ட வாழ்வும், செல்வமும், அசையா நெஞ்சும் கொண்டு பல்லாண்டுக காலம் வாழியவே என்று போற்றினர் ''பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்று'' [புறம், 2:24] வழுவற்ற புகழுடன் மன்னனே, நீ நீண்ட நெடுங்காலம் வாழ்வாய்' என்று சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரல் ஆதனைப் புகழ்ந்து பாடினார், முரஞ்சியூர் முடிநாக-

ராயர். ஆலத்தூர்க் கிழார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி-வளவனைப் பாடுங்கால் 'பெரும! இந்த உலகத்தின் கண் நற்குணங்-களால் அமைந்தோர் செய்த நல்வினையுண்டாயின், இமயமலையின் கண்ணே இனிய ஓசையைப் பயிற்றிக் கீழ் காற்றான் வரும் பெரிய முகில் சொரிந்த நுணணிய பல துளியினும் பல காலம் வாழ்வாயாக''] என்று போற்றினார். அதனைக் குறிக்கும் புறநானூற்றுப் பாடல் வருமாறு

'சான்றோர் செய்த நன்றுண்டாயின்
இமயத் தீண்டி யின் குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்ப: றுளியினும் வாழிய பலவே'' [34 :20-23]

பாண்டிய மன்னனுடைய பெருஞ் சிறப்புகளை வரையறுத்த இளங்கோ அடிகள்,

''வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி!''
[சிலம்பு, 2 (11): 21-22]

இமயமலைக்குத் தமிழ் மன்னர்களைத் தன்பால் ஈர்க்கும் சக்தி இருந்தது. ஆகவே அம்மன்னர்கள் அம்மலையை மதித்தனர், புகழ்ந்தனர். அதனை அடக்கித் தம் இலச்சினையைப் பொறிக்க வேண்டுமென்று தணியாத வேட்கை கொண்டனர். அம் மலைக் கண் தம் இலச்சினையைப் பொறித்தால் அவர்களுடைய புகழ் என்றுமழி யாது என்றும் எண்ணினர். அவ்விதம் வெற்றி வாகை சூடிய மன்னன் 'மன்னர் மன்னன்' என்று மக்களால் போற்றப்பட்டான்.

இமயப் படையெடுப்பு : முந்நாட்டு முடிமன்னர்களில் ஒரு சோழனும், இரு சேரரும், ஒரு பாண்டியனும் இமயம் வரை படை-யெடுத்துச் சென்று வெற்றி வாகை சூடி, தம் புலி, வில், கயல்மீன் இலச்சினைகளை முறையே அம் மலைக்கண் பொறித்து மீண்டனர் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் கூறக் காணலாம் சிலப்பதி-காரம் இச்சிறப்புடைய ஒரு சோழனையும். ஒரு சேரனையும். ஒரு பாண்டியனையும் புகழ்ந்து பாடிற்று. சிலப்பதிகார அடிகள் வருமாறு:

''கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழின் மன்னர்

ஏவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன்''... [சிலம்பு : 17 : 1-5].

இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் தரும் பொருள்: "இமய நெற்றியில் தானெழுதிய கயலுக்கு அயலெழுதிய புலியையும் வில்லையுமுடைய செம்பியன் சேரனென்னும் மன்னரும் நாவலந்தீவின்கண் மன்னரும் மற்றுமுள்ள குறுநில மன்னரும் தன்னேவல் கேட்டொழுக நிலமுழுதும் ஆண்ட முத்து மாலை பொருந்திய வெண்கொற்றைக் குடையுடைய பாண்டியன்' என்பதாம். அதாவது பாண்டியன் இமயத்தில் தம் கயல் மீன் பொறியைப் பொறிக்கு முன்னரே சோழரும் சேரரும் தத்தம்புலி, வில் பொறிகளைப் பொறித்திருந்தனர் என்பதாம்.

அடியார்க்கு நல்லாருரையைச் சற்று நுணுகி ஆராய்ந்தால் இச்சோழனும், சேரனும் பாண்டியனுக்குக் காலத்தால் சற்று முந்தியவர் என்பது புலனாகும். ஆனால் சிலப்பதிகாரச் சொற்களை வகைப்படுத்தி, ஆழச் சிந்தித்தால் இம் மும்முடி மன்னர்களுக்குமிடையே அதிகக் கால வேறுபாடு இல்லாதது காணலாம். இச்சோழனும், சேரனும், பாண்டியனுக்குச் சமகாலத்தவர் என்பது பெறப்படும். இம் மும்முடி மன்னர்களில் சோழன் திருமாவளவன் என்றும், சேரன் இமயவரம்பன் என்றும், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்றும் கருதப்படுகிறது. இச்சோழ, சேர, பாண்டியப் படையெடுப்புக்குப் பின்னரே சேரன் செங்குட்டுவனின் இமயம் நோக்கிய படையெடுப்பும் நிகழ்ந்திருக்க வேண்டும். முதலில் நாம் சிலப்பதிகாரத்தில் கூறப்படும் சோழ, சேர, பாண்டியப் படையெடுப்புகளை நடத்திய பெருமைக்குரியோர் யார் என்று காண்போம்

மேற்கூறப்பட்ட முத்தமிழ் மன்னர் மூவரில் காலத்தால் சற்று முந்தியவன் இமயவரம்பனே என்பது ஆராயின் விளங்கும். அதாவது மூவரும் சமகாலத்தவர்; ஆனால் இமயவரம்பன் சற்று முன்னரே சேரநாட்டு முடிமன்னரானான். இமயவரம்பனின் தந்தை பெருஞ்சோற்றுதியன் சேரலாதன். சோழன் கரிகாற் பெருவளத்தானுடன் பொருது பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து இறந்த சேரமான் பெருஞ்சேரலாதனும், இமயவரம்பனின் தந்தையும் ஒருவரே. அவர்தான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன். இதனை கழாத்தலையார், வெண்ணிக் குயத்தியார் பாடிய புறநானூற்றுப் பாடல்களும், மாமூலனார் பாடிய அகநானூற்றுப் பாடலும் விளக்கி நிற்கின்றன. கரிகாலன்

ஆண்ட காலம் கி.மு 60 க்கும் கி.மு. 20க்கும் இடைப்பட்ட காலம் என்று கருதப்படுகிறது. ஆகவே கரிகாலனும் உதியன் சேரலாதனும் சமகாலத்தவர். இருவருக்குமிடையே நிகழ்ந்த போரில் உயிர் துறந்த சோனுக்குப் பின் சேர நாட்டு அரசுரிமை எய்தியவனே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவன் கரிகாலன் இறப்பதற்கு முன் அரியணை-யேறினான். கரிகாலனின் ஆட்சி முடிந்த பின்னரே அவனுடைய பின்னவர் சோழநாட்டு அரியணை ஏறியிருக்க முடியும். கரிகாலனுக்குப்-பின் சோழ நாட்டினை ஆண்ட சோழன் பெரும்பாலும் இமய-வரம்பனுக்குக் காலத்தால் சற்று இளையவனாக இருக்கக்கூடும். இமய மலைப் படையெடுப்பில் பங்கு பெற்ற சோழன் இவனாகவே இருக்க வேண்டும். கரிகாலனுக்குப் பின் சோழ நாட்டை ஆண்டவன் திருமா-வளவன் என்பவனே.

இனி, நாம் இமயமலையில் புலி பொறித்து மீண்ட சோழன் யார்? என்றும், அவன் கரிகாலனா? திருமாவளவனா? என்றும் ஆராய்-வோம். இளங்கோ தம் சிலப்பதிகாரத்தில் மூன்று சோழ மன்னர்-களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அப்பெயர்கள் 'செம்பியன்', 'கரிகாலன்', 'திருமாவளவன்' என்பனவாம். கரிகாலன் என்ற பெயர் இரண்டு இடங்களில் குறிக்கப்படுகின்றது. திருமாவளவன் என்ற பெயர் ஒரு இடத்தில் குறிக்கப்படுகின்றது. செம்பியன் என்ற பெயர் நான்கு இடங்களில் குறிக்கப்படுகின்றது. மேலும் கடியலூர் உருத்-திரங்கண்ணனார் வரைந்த பட்டினப்பாலை 'திருமாவளவன்' என்ற சோழனையே புகழ்ந்து பாடுகின்றது ஆகவே 'பட்டினப்பாலையில் வரும் திருமாவளவனும், சிலப்பதிகாரத்தில் வரும் திருமாவளவன் செம்பியன் என்ற அரசரும் ஒருவரே என்றும். இத்திருமாவளவனே சிலப்பதிகாரத்தில் இரண்டு இடங்களில் வரும் கரிகாலன்' என்றும் நச்சினார்க்கினியர் உரைக்கிறார். அடியார்க்கு நல்லாரும் இத்திருமா-வளவன் கரிகாலனே என்றும் உரைத்தார். உ.வே. சா. வின் சிலப்பதி-காரப் பதிப்பில் இக்கருத்தை உறுதிப்படுத்தும் செய்தியொன்று மேற்-கோளாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஈண்டுக் 'கரிகாற் பெரும் பெயர்த் திருமாவளவனைப் பாலை பாடிய பரிசிலன்'' என்று கூறப்-பட்டுள்ளது.

சிலப்பதிகார உரையாசிரியரின் உரையை நோக்கின் சிலப்பதி-காரத்தில் வரும் சோழன் கரிகாலனே என்றும், 'திருமாவளவன்' என்பது அவனது சிறப்புப் பெயர் என்றும் கொண்டதாகத் தெரிகிறது.

இதனைப் பின்பற்றியே பேராசிரியர்கள் கே பி சுப்பிரமணிய அய்யரும், எம். ஆரோக்கியசாமியும் கரிகாலன் என்ற சோழ அரசனே வடநாடு சென்றதாகக் கொண்டு அவனது சிறப்புகளை விளக்கினர். ஆனால் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கரிகாலனும் திருமாவளவனும் இருவர் என்று கொண்டுள்ளார் அப்பேராசிரியர். "பழங்காலந்தொட்டே கரிகாலன் கட்டுக்கதைகளின் நாயகனாக மாற்றப்பட்டான் ஆனால் இன்று அவை உண்மை வரலாறு என்று கருதப்படுகிறது" என்று கடிந்து கூறினார்' அவ்வாறு கூறிய பேராசிரியர் சிலப்பதிகாரத்தில் வரும் திருமாவளவனை பெரும் திருமாவளவன் என்ற சிற்றரசனாக்கினார். எனவே சிலப்பதிகாரப் புகழ் திருமாவளவனின் வெற்றிகளை கரிகாலனுக்கு ஏற்றிக் கூறினர் போலும்.

அடியார்க்கு நல்லார் எவ்வாதார முகத்தான் திருமாவளவன், கரிகாலனே என்று கூறினார் என்பதையும் பார்ப்போம். செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் இமயத்தில் கரிகாலன் புலிப் பொறி பொறித்து மீண்டான் என்ற குறிப்பு காணப்படுகிறது. இதனையே அவர்தம் ஆதாரமாகக் கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

i) ஆனால் அறிவர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள், பட்டினப்பாலைத் தலைவன் கரிகாலன் அல்லன் என்றும். அவன் திருமாவளவன் என்ற மற்றுமொரு சோழ அரசன் என்றும் ஆராய்ந்து கூறியுள்ளார் நாவலரின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, பேராசிரியர் சி.இ. இராமச்சந்திரன் மேற்கூறப்பட்ட கருத்துக்களை மறுத்து கரிகாலனும் திருமாவளவனும் இருவரே என்று ஆய்ந்தறிந்துள்ளார். அதற்குத் தரும் கருத்தமைதிகள் வருமாறு : (i) கரிகாலனும் திருமாவளவனும் ஒரே பெயர்க்குரியராக இருப்பின், 'கரிகாலன்' என்ற பெயரினை மட்டுமோ, 'திருமாவளவன்' என்ற பெயரினை மட்டுமோ பயன்படுத்தியிருப்பாரன்றி வேறுவேறு வகைகளில் இரு இடங்களில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டிருக்க மாட்டா இரு பெயர்களும் வேறு வேறு என இதன் வாயிலாக அறியலாம். (ii) பட்டினப் பாலையின் குறிப்புகளுக்கும், பொருநராற்றுப்படையின் குறிப்புகளுக்கும் பெருத்த வேறுபாடு உளது. கரிகாலன் தன் தாய் வயிற்றிலேயே அரசுரிமை எய்தினான் எனப் பொருநராற்றுப் படை குறிப்பிடுகையில், பட்டினப் பாலையில் சிறை வயப்பட்டு அங்கிருந்து வெளிப் போந்து, அரசுரிமை பெற்றதாகச் செய்தி காணப்படுகிறது. பிறப்பிலிருந்தே

அரசோச்சியவன் என்று பொருநராற்றுப்படை கூறுகிறது. கரிகாலனிடம் சேர பாண்டியர் தோற்றனர் என்று பெருநராற்றுப்படையில் குறிக்கப்பட்டிருக்கிறது. பட்டினப்பாலை பாண்டியர் தம் தோல்வியை மட்டும் குறிப்பதாயிற்று இவ்வாறான வேறுபாடுகள், இயல்பாகக் கரிகாலனும் திருமாவளவனும் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டக் கூடியவனாக அமைகின்றன.

iii) செயங்கொண்டாரின் படைப்பு லெய்டன் பட்டயங்களுக்குக் காலத்தால் பிற்பட்டது. இந்த இரண்டிலும் கரிகாலன் காவிரிக்குக் கரை கண்டு, கல்லணை எழுப்பிய செய்தி காணப்படுகிறதே அன்றிக் கரிகாலனின் இமயப்படையெடுப்பு குறிக்கப்படவில்லை. இச்சான்றுகளில் குறிப்பிடப்பட்ட யாரும் இமயம் சென்று திரும்பியதாக இல்லை. எனவே, முதலாம் இராசராசனுக்கும், முதலாம் இராசேந்திரனுக்கும் பிற்பட்டவரான செயங்கொண்டார், கரிகாலனின் இமயப் படையெடுப்பினை அறிந்திருந்தார் எனக் கூறுவது பொருத்தமாயில்லை. கரிகாலன் இமயம் வரைச் செல்லவில்லை எனவும், திருமாவளவனே அத்தகைய செயலைச் செய்தவனெனவும், அடியார்க்கு நல்லாரின் திருமாவளவனே கரிகாலன் என்ற கூற்று தவறு எனவும் அறிகிறோம்.

iv) கரிகாலனைப் பற்றிக் குறிப்பிடுகையில் உறையூரோ காவிரிப்பூம்பட்டினமோ அவனுடைய பெயருடன் இணைத்து கூறப்படவில்லை. பரணர் கரிகாலனுடன் கழார் என்னுமிடத்தையே குறிப்பிடுகிறார். கழார் துறைமுகமாகவும், இடையாறு அவனது தலைநகராகவும் விளங்கின எனக் கருதப்படுவதால் திருமாவளவனை, உறையூர், காவிரிப்பூம்பட்டினம் இவற்றோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருப்பதும் நம் கருத்தை வலியுறுத்தும்.

மேற்கூறப்பட்ட கருத்துகளுக்கு வலுவூட்டுவதாகப் பிறிதொரு கருத்து வரலாற்றில் உள்ளது. காவிரிப்பூம்பட்டினம் கி பி முதலாம் நூற்றாண்டில் செல்வச் செழிப்பு மிக்க துறைமுகப் பட்டினமாகத் தோற்றமளித்தது என்று 'பெரிபுளூஸ்' என்ற நூலும், பிளினியின் குறிப்புகளும் அறிவிக்கின்றன. இதனையொத்த செய்தி பட்டினப்பாலையில் மட்டுமே பரக்கக் காணலாம். கரிகாலன் இத்துறைமுகப்பட்டினத்துடன் தொடர்புடையவன் என்றால் ஏன் அவன் அப்படி கூறப்படவில்லை? மேலும் காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பு முதலாம் நூற்றாண்டில் உச்ச நிலையை எய்தியதாகக் கூறப்படும் கருத்து கரிகாலனுக்குப் பின் சோணாட்டு அரியணையேறிய திருமாவளவனின் சிறப்பாட்சியைச் சுட்டுகிறது. எனவே,

பட்டினப்பாலையில் கூறப்படும் புகார்பட்டினத் தலைவனும் 'பெரிபுளூஸ்' என்ற நூலில் குறிக்கப்படும் 'காபேரிஸ் களஞ்சியத்தின்' தலைவனும் திருமாவளவனே என்பதில் ஐயமில்லை. கங்கை நதி-யினுள் தமிழர்கள் கப்பலோட்டி வாணிபம் செய்தனர் என்ற செய்தி தமிழ் இலக்கியத்திலும், முதலாம் நூற்றாண்டை யொட்டி எழுதப்பட்ட அந்நியரின் குறிப்புகளிலும் காணக் கிடைக்கின்றது காவிரிப் பூம்பட்டி-னத்திலிருந்து 'சங்கரா', 'கொலண்டியா' என்ற கப்பல்களும் படகு-களும் பிற நாடுகளுக்குச் சென்று வந்தன என்றும் அறிகிறோம். இது தமிழரின் வர்த்தக விரிவாக்கத்தைக் காட்டுகிறது. சோணாட்டுக்கும் வடகிழக்கு இந்தியாவுக்குமிடையே ஏற்பட்ட வர்த்தகத் தொடர்பு திருமாவளவனின் வெற்றிப் படையெடுப்பால் பன்மடங்கு விரிவடைந்-தது என்று கருதத் தோன்றுகிறது. இவ்வாணிபப் பெருக்கத்தால் திருமாவளவனின் புகார்ப்பட்டினம் காண்போர் கண்களைக்கவர்ந்தது.

மேலும் பட்டினப்பாலையில் கரிகாலனைப் பற்றிய செய்தி-களோ அவனுடைய தந்தையாகிய உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி பற்றிய செய்திகளோ குறிக்கப்படவில்லை. ஆனால் அந்நூல் திருமா வளவனின் சிறப்புகளை மட்டுமே படம் பிடிக்கிறது எனவே, கரிகாலன், திருமாவளவன் அல்லன் என்பதும் திருமாவளவன் பிறி-தொரு சோணாட்டு மன்னன் என்பதும். அவன் கரிகாலனுக்குப் பின் கி.பி. முதலாம் நூற்றாண்டில் சோணாடு ஆண்டவன் என்பதும், இத்திருமாவளவனே இமயப் படையெடுப்பை முடித்துக் காட்டினான் என்பதும் விளங்கும்.

பாண்டியரில் எப்பாண்டியன் இமயப் படையெடுப்பை நடத்-தினான் என்று திடடவட்டமாக அறியக் கிடைக்கவில்லை இப்பாண்டி-யரில் ஆரியப்படை கடந்த பாண்டியன் ஒருவன் குறிக்கபபடுதலின், பெரும்பாலும் இப்பாண்டியனே அச்சிறப்புகளு உரியவன் என்றும் தோன்றுகிறது.

சேர சோழ, பாண்டியப் படையெடுப்புகள்: இமயமலை நோக்கிப் படையெடுத்த சேரன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனாவான். இவன் 'உதியஞ் சேரற்கு வேளியன் வேண்மாள் நல்லினி யீன்ற மகன்' என்று பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்துப் பதிகம் கூறுகிறது வடநாட்டு ஆரியமன்னர் தமிழ் நாட்டு மன்னரை இகழ்ந்த காரணத்தால் கோபங்-கொண்டான், நெடுஞ்சேரலாதன். தம் போர் வலியை அம்மன்னர்க்குக் காட்ட விழைந்தானாகி, படையெடுத்துச் சென்றான். படையின்

பெருமை அறியாது பகை கொண்டு எதிர்த்த வேந்தர் சிலர் வலி தொலைந்து ஒடுங்கினர். பலர் பணிந்து திறைதந்து நண்பராயினர். தாம் நினைத்தவாறு இமயத்தில் தன் விற்பொறியைப் பொறித்து மீண்டான். பரணர் பாடிய அகநானூற்றுப் பாடல் இதனை அறிவிக்-கின்றது. அப்பாடல் அடிகள் :

''ஆசிரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்' [அகம்:396]

என்பதாம். இக்காரணம் பற்றியே புலவர் இவனை 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்று புகழ்ந்து பாடினர் 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்பதற்கு அறிஞர். இமயத்தில் தன் பொறியைப் பொறித்தவன் என்று பொருள் கூறுவர்.

அஞ்சி அடிபணிந்த மாற்றரசரும் தோற்றுச் சரணடைந்த ஆரிய மன்னரும், பிறரும் தந்த பெருமளவுச் செல்வத்தைச் சேரலாதன் தம் தலைநகராகிய மாந்தையில் குவித்து வைத்தான். மாற்றரசர் செலுத்-திய திறைப்பொருளில் வைரங்களும், பெண்ணுருக் கொண்ட பொற் பாவையும் இருந்தன. இவற்றை அவனுடைய முன்னோர் கண்டி-ருந்தால் மிரண்டிருப்பர். மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் இதனைக் கீழ்க்கண்டவாறு விளம்பிற்று.

''வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீரோட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொ டாம்பல்
ஒன்று வாய் நிறையக் குவை இ அன்றவன்''.

கங்கைப்புறத்து ஆரிய மன்னரை வென்றமையின் இவன் நாடு தென்குமரிக் கடல் முதல் இமயம்வரை பரவியிருந்தது. குமட்டூர்க் கண்ணனார் பாடிய பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்துப்பாடலொன்று இப்பரந்த நாட்டைப் புகழ்ந்து பாடிற்று.

''ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே''

[11:23-25].

இவ்வீரச் செயல்புரிந்த இச்சேரலாதனின் புகழும் இமயமலை வரை நின்று நிலவியது. மக்களும், அறிஞரும் இவனை 'இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் என்று சிறப்புற அழைக்கலாயினர். இச்சிறப்பினைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார் கூற்றாவது:

''அமைவரல் அருவி இமையம் விற் பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீ இத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி
... ...
'இமய வரம்பன் நெடுஞ் சேரலாதனைக்'
குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு''

என்பதாம் அக்காலத் தமிழர் உலகென்று நம்பிய இந்தியா எங்கணும் அவன் புகழ் பரவிற்று

சோழ நாட்டை ஆண்ட வேந்தரில் இமயம் வரை துணிந்து படையெடுத்துச் சென்ற சோழன் திருமாவளவனே. இவன் கரிகாலனுக்குப் பின்னவன்; இளையோன்; கரிகாலனின் மகன். கரிகாலன் தம் நாட்டில் அரசியல் அமைதியை விட்டுச் சென்றான். தென்னகத்து மன்னரை வென்றடக்கித் தம் மைந்தனுக்குத் தென்னகத்தில் பகையற்ற நிலையை உருவாக்கினான். இந்த அரசியல் அமைதியைப் பயன்படுத்தி, வடநாடு நோக்கி விரைந்து முன்னேறியவனே திருமாவளவன். இவனைப் புகழ்ந்து பாடும் பட்டினப்பாலை இவனுடைய இலங்கைப் படையெடுப்பைக் கூறுமிடத்து, 'கொண்டி மகளிரைக் கவர்ந்து வந்த செய்தி கூறும். இவனது புகார்ப்பட்டினத்தில் பொன்னும் பொருளும் குவிந்து கிடந்தன. இதனைப் பட்டினப்பாலை :

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்

தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அறியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்''

என்று புகழ்ந்து பாடிற்று.

அரசியல் அமைதியும். பொருட் செழிப்பும் பெற்ற திருமாவளவன் வட நாடு நோக்கிப் படையெடுத்ததில் வியப்பில்லை. வடநாடு முழுவதும் வெல்ல எண்ணினான். ஆரிய மன்னருடன் பொருதான். வெற்றிவாகை சூடினான். இமயத்தில் தம் புலிப் பொறியைப் பொறித்து மீண்டான். மீண்டும் இம்மலைக்கு அப்பாற்பட்ட பகுதி-களையும் கைப்பற்ற எண்ணினான். ஆனால் இம்மலை இவனைத் தடுத்து நிறுத்தி, எண்ணத்தைச் சிதறடித்தது. வெற்றியுடன் தம் நாடு திரும்பிய திருமாவளவனை மன்னரும் மக்களும் கண்டு வணங்கினர். கங்கைப் புறத்து வச்சிர நன்னாட்டு மன்னனும், மகத நன்னாட்டு மன்னனும், அவந்தி வேந்தனும் இவனுக்குத் திறை செலுத்தினர். இச்செய்தி கூறும் சிலப்பதிகார அடிகள் :

''செருவெங் காதலிற் றிருமாவளவன்
. . . .
. . . . - மலையென
இமைய வருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள் வாய் வேந்தன்
பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்தனுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரணவாயிலும்'

என்பதாம்.

[சிலம்பு : 1 : 5 : 90 - 104]

திருமாவளவன் சென்று இமயப்பகுதிக்கு அடுத்த நாடுகளா-யிருந்தவை வச்சிர நாடும் மகதமும் ஆம். வச்சிரநாடு என்பது சோணை நதிப் பகுதியாகும். அதனையடுத்த நாடே மகதநாடு. இது

கங்கைநதிப் பகுதியாகும். இவ்விருவரையும் வென்றது கேட்ட அவந்தி நாட்டரசன் சோழனிடம் நட்பு நாடினான். ஆகவே அவந்தி நாடு மேற்கூறப்பட்ட இரு பகுதிகளுக்கும் வடபால் உள்ளது என்பது புலனாகும். இப்பகுதியில் திருமாவளவன் தம்மேலாண்மையை நிலை நாட்டிவிட்டு, இமயத்தின்கண் தம் புலிப் பொறியைப் பொறித்தான். மேற்கொண்டு படையெடுத்துச் செல்ல அனுமதிக்காத இம்மலையின் தென்பறத்திற்றான் இவன் தம் பொறியைப் பொறித்திருக்க இயலும் இவற்றை மனத்திற் கொண்டே இளங்கோ கீழ்க்கண்டவாறு பாடியிருக்க வேண்டும்.

"இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற் கோட் டுழையதா எப்பாலும்".

இம்மங்கல வாழ்த்தடிகள் மூலம் இவன் மகத நாட்டையும் வச்சிர நாட்டையும் கடந்து, அவந்தி நாடு வழி திபெத்தெல்லையை அடைந்-தான் என்பது பெறப்படும்.

இத்திருமாவளனே கரிகாலன் என்று தவறாகக் கொண்டு பின்னூலாகிய கலிங்கத்துப் பரணியும் இவ்வெற்றியைப் புகழ்ந்து பாடிற்று. செயங்கொண்டார் பாடிய அடிகள் :

"செண்டு கொண்டு கரிகால னொடு காலிலிமயச்
சிமய மால் வரை திரித் தருளி மீளவதனைம்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்றுமுதுகிற்
பாய் புலிப் பொறி பொறித்தது மறித்த பொழுதே"
[இராசபாரம்பரியம் :1]

என்பதாம்.

திருமாவளவனின் இப்படையெடுப்பால் சோழர் புகழ் நிலை பெற்றது. தாம் பெற்று வந்த செல்வங்களால் புகார்ப் பட்டினத்தைச் செழிப்புறச் செய்தான். காவிரிப்பூம்பட்னடித்துப் பண்டங்கள் இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதிகளுக்கும் சென்றன.

(தொடரும்)

ஒப்பிலக்கியம் என்றால் என்ன?

*டாக்டர் வை. சச்சிதானந்தன், M. A. M. Litt, Ph D.

1. முன்னுரை

நம்முடைய பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் ஒப்பிலக்கியத்தைப் பற்றித் தவறான கருத்து பரவலாக யிருக்கிறது. இரு வேறு மொழிகளைச் சார்ந்த இரண்டு நூல்களையோ நூலாசிரியர்களையோ கட்டுப்பாடற்ற முறையில் மனம்போனபோக்கில், உணர்ச்சி வசப்பட்டு ஒப்புமை செய்வதை 'ஒப்பிலக்கியம்' என்று நினைப்பது தவறு. இன்றைய அறிவுலகத்தில் ஒப்பிலக்கியம் நூறாண்டுகளே வளர்ச்சியுற்றிருந்தாலும், அது கல்வி நிலையங்களில் பல நூற்றாண்டுகளாகக் கற்பிக்கப்பட்டு வரும் அறிவியல், மானிடவியல் ஆகியவற்றை ஒத்த பாடத்துறையாகும்.

2. ஒப்பிலக்கிய வரையறையும் வரம்பும்

இன்றைய தலைசிறந்த ஒப்பிலக்கிய அறிஞர்களுள் ஒருவரான ஹென்றி எச் எச். ரிமாக் ஒப்பிலக்கியத்தைக் கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறார்-

> ஒப்பிலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் வரம்புகளுக்கு அப்பாற்பட்ட இலக்கிய ஆய்வும், இலக்கியத்தை ஒருபுறத்திலும், கலைகள் (எடுத்துக்காட்டு : ஓவியம், சிற்பம், கட்டடக் கலை, இசை . தத்துவம், வரலாறு, சமுதாய அறிவியல்கள் (எடுத்துக்காட்டு : அரசியல், பொருளியல், சமுதாயவியல்), அறிவியல்கள், சமயம் முதலிய அறிவு, நம்பிக்கைப் பரப்புகளை மற்றொரு புறத்திலும் கொண்டு இவற்றினிடையே உள்ள

---

*டாக்டர். வை. சச்சிதானந்தம் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில - ஒப்பிலக்கியப் பகுதியின் துறைத்தலைவர். அமெரிக்காவில் இந்தியானா பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கியத்தினை முறையாகப் பயின்ற இப்பேராசிரியர் பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் ஒப்பிலக்கியம் பற்றிய நூல் ஒன்றனை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அந்நூல் தமிழிலும் வெளிவரவுள்ளது. ஒப்பிலக்கியத் துறை நம்நாட்டில் ஜாதவ்பூர் பல்கலைக்கழகத்தில் முதன்முதல் 1958-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னர் தற்போது மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஒப்பிலக்கியத் துறையினை ஏற்படுத்திய பெருமை பேராசிரியர். சச்சிதானந்தம் அவர்களைச் சாரும்.

— ஆசிரியர்.

தொடர்புகளை ஆய்வதும் ஆகும். சுருங்கக் கூறின் ஒரு இலக்கியத்தை மற்றொரு இலக்கியத்துடன் அல்லது மற்ற இலக்கியங்களுடன் ஒப்பு நோக்குவதும் இலக்கியம் அல்லாத ஏனை அறிவியல்களுடன் ஒப்பு நோக்குவதும் ஆகும். (1)

இவ்விலக்கணம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேசிய இலக்கியங்களை ஒப்பிடுவதைக் குறிக்கும் ஒப்பிலக்கியம்; இலக்கியத்தை பிற அறிவுத் துறைகளாகிய அறிவியல்கள் அல்லது கலைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் இலக்கியப் படிப்பை விரிவுபடுத்துவதையும் குறிக்கும் ஒப்பிலக்கியம். ஒப்பிலக்கிய இலக்கணத்தின் இவ்விரு கூறுகளும் ஒன்றையொன்று சார்ந்திருந்தாலும், ஒப்பிலக்கியத்திற்கு வித்திட்ட பிரெஞ்சு அறிஞர்கள் இலக்கியத்தை இலக்கியத்துடன் தான் ஒப்பிட வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்கள். ஏனென்றால், அதுதான் அவர்களுடைய நடைமுறை இலக்கியத்தை இலக்கியத்துடன் ஒப்பிடுவதோடு கூட இலக்கியத்தை மற்ற கலைகளுடனும் அறிவியல்களுடனும் ஒப்பிடுவது, அறிவு முறையைச் சார்ந்ததே என்று ஒப்பிலக்கியத்தை இந்நூற்றாண்டில் பெருமளவு வளர்த்த அமெரிக்க அறிஞர்களில் பலர் கருதுகின்றார்கள். இந்நோக்கு அவர்களுடைய நடைமுறையைச் சார்ந்தது. (2)

பேராசிரியர் ரிமாக் அவர்களின் ஒப்பிலக்கிய வரையறையின் இரண்டாவது கூறு சர்ச்சைக்குரியதாக ஆகிவிட்டாலும், பெரும்பாலான ஒப்பிலக்கிய அறிஞர்கள் இலக்கியத்தை மற்ற கலைகளுடனும் அறிவியல்களுடனும் ஒப்பு நோக்கி ஆராயவதில் தயக்கம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பிலக்கிய உலகில் இத்தகைய பரந்த ஆராய்ச்சிக்குச் சில அறிஞர்கள் (இவர்கள் அமெரிக்கக் குழுவைச் சேர்ந்தவர்களே) எதிர்ப்பு தெரிவிப்பதற்குக் காரணம், இத்தகைய ஆராய்ச்சி இலக்கியத்திற்கும் இலக்கியமல்லாதவைகளுக்கும் இடையே உள்ள பாகுபாட்டை மறந்து வரம்பற்ற, வறட்சியான எண்ணக் குவியல்களில் முடிந்து குழப்பத்தை விளைவிக்கும் என்பதே ஆயினும், ரிமாக் அவர்கள் கூறியதுபோல், ஒரு இலக்கியத்தை ஒரு முறையான, தனித்துப் பார்க்கத்தக்க, ஆனால் தெளிவான இலக்கியமல்லாத பாடத்துறையுடன் ஒப்பிடுவதில் ஆபத்தில்லை. இதனை விளக்குவதற்குப் பாரதியைச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். அவருடைய பாடல்கள் வேதாந்தத்தின் நுட்பமான தாக்கத்திற்குள்ளாகின என்பது அறிஞர்களின் கருத்து. வேதாந்தக் கருத்துக்கள்

எப்படிப் பாரதியின் கவிதை நோக்கைத் திசை திருப்பி அவருடைய பாடல்களில் ஆழ்ந்த எண்ணத்தை உண்டாக்கின என்ற ஆராய்ச்சி ஒப்பிலக்கியமாகாது ஆனால் வேதாந்தத்தைத் தத்துவப் பாடத்துறையின் ஒரு கூறாகக் கருதி பாரதியாரின் கவிதைகளில் அதனுடைய தாக்கத்தை அதாரமாகக் கொண்டு தத்துவத்திற்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்தால் அஃதோர் ஒப்பிலக்கியமாகும். இலக்கியததிற்கும் இசைக்கும். இலக்கியத்திற்கும் ஓவியத்திற்கும் உள்ள நெருங்கிய உறவைப் பற்றிச் சிறந்த முறையில் ஒப்பிலக்கிய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ([3]).

3. பொது இலக்கியமும் தேசிய இலக்கியமும்

ஒப்பிலக்கியம் ஒரு இலக்கியத்தை மற்றொரு இலக்கியத்தோடு ஒப்பிடுகிறது என்று நாம் எடுத்துக் கொண்டால். ஒப்பிடப்படும் இலக்கியங்களின் இயல்பு யாது? என்ற வினா எழுகின்றது. இவ்விலக்கியங்கள் ஒவ்வொன்றும் தேசிய இலக்கியம் என்று கூறலாம். தேசிய இலக்கியம் என்றால் என்ன என்ற வினாவிற்கு விடை காண்ப) தற்கு முன்புஒப்பிலக்கியத்திற்கும்,பொது இலக்கியம் (General literature என்ற கொள்கைக்கும் இடையேஉள்ள வேறுபாட்டைநாம்உணரவேண்டும். இக்கொள்கையை வரையறை செய்த பிரெஞ்சு அறிஞர் பௌல் வான்தீகம் (Paul Van Tieghem) இரண்டு முதற்பொருள்கள் (elements) இடையே உள்ள இருவழி இணைப்புகளை (binary relations) ஆராய்வதுதான் ஒப்பிலக்கியம் என்கிறார். இம் முதற்பொருள்கள் தனிப்பட்ட எழுத்தாளர்களாகவோ அல்லது நூற்களாகவோ அல்லது குழுக்களாகவோ அல்லது நூற்றொகுதிகளாகவோ அல்லது முழு இலக்கியங்களாகவோ இருக்கலாம். பொது இலக்கியம் என்பது, இரண்டிற்கு மேற்பட்ட இலக்கியங்களுக்குப் பொதுவான உண்மைகளைத் தொடர்புபடுத்தும் ஒரு பாடத்துறை என்கிறார். இவ்வுண்மைகளினிடையே ஒன்றுக்கொன்று சார்ந்த நிலை (mutual dependence) இருக்கலாம்; அல்லது இல்லாமலும் இருக்கலாம்; அல்லது இணைவரை (analogy)த் தொடர்பு இருக்கலாம். தீகம் அவர்களின் கூற்றுப்படி, ஒப்பிலக்கியம் இரு இலக்கியங்களுக்கு இடையேயுள்ள தொடர்பையும் அல்லது இருவழித் தொடர்பையும், பொது இலக்கியம் இரண்டுக்கு மேற்பட்ட இலக்கியங்களுக்குப் பொதுவாகவுள்ள மூலப்பொருள்களின் தொடர்பையும் ஆராய்கின்றன. ஆனால், நடைமுறையில் ஒப்பிலக்கியத்தையும் பொது இலக்கியத்தையும் பிரிப்பது கடினம்.

சான்றாக. ஆங்கில வரலாற்று நாவலாசிரியரான வால்டர் ஸ்காட்டிற்குப் பிரெஞ்சு நாட்டில் உள்ள செல்வாக்கு (இந்த ஆய்வு பிரெஞ்சு, ஆங்கில இலக்கியங்களினிடையே யுள்ள இருவழித் தொடர்புகளை உள்ளடக்கியது). ஐரோப்பாவில் வரலாற்று நாவலின் வளர்ச்சி (பல்வேறு இலக்கியங்களின் ஆய்வையும் உள்ளடக்கியது) ஆகிய இவ்விரண்டிற்கும் உள்ள நுண்ணிய வேறுபாட்டினைப் பிரித்துக் காண்பது இயலாத காரியம்

தேசிய இலக்கியம் என்றால் என்ன என்ற கேள்வி பலருக்குச் சிரிப்பையும் சிலருக்கு வியப்பையும் அளிக்கலாம். இக்கேள்விக்கு விடை எல்லோருக்கும் தெரிந்ததுதான் என்பது காரணம். ஆனால் இது ஒரு சிக்கலான கேள்வி. தேசிய இலக்கியம் என்பதற்குப் பாரம்பரியமான இலக்கணமும் அறிஞர்களின் இலக்கணமும் உள்ளன. வழக்கப்படி, தமிழ் இலக்கியம் என்றால் தமிழ் நாட்டில், தமிழில் எழுதப்படுவது என்ற வரையறை, தமிழ் நாட்டிற்கு வெளியே எழுதப்படும் தமிழ் இலக்கியத்தை ஒதுக்கிவிடுகிறது. அறிஞர்களின் கருத்துப்படி. தேசிய இலக்கியம் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். நூற்கள் ஒரே மொழியில் எங்கு எழுதப்பட்டாலும் ஒரே மாதிரியான முருகியல் நோக்கை உடையனவாக இருக்க வேண்டும். மேலும் ஒரே மொழியில் எழுதும் எழுத்தாளர்கள் ஒரே மாதிரியான கலாச்சாரக் கொள்கையை உடையவர்களாக இருக்கவேண்டும். ([4]) இவ்வறிவு சார்ந்த கொள்கையின்படி. இலங்கையிலும், மலேஷியாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும், மற்ற வெளிநாடுகளிலும் எழுதப்படும் தமிழ் நூல்களைத் தமிழ் இலக்கியம் என்று தேசிய நோக்கில் கூறலாம் ([5]).

நூலாசிரியர்களை அவர்கள் நூல்களை எழுதும் மொழிகளோடு தொடர்பு படுத்தாமல் நாடுகளுடன் தொடர்பு படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. பெர்னார்ட்ஷா, ஏட்ஸ் போன்ற ஐரிஷ் எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதினர். மேட்டர்லிங் என்ற நாடகாசிரியர் பெல்ஜியத்தில் பிறந்தவர்; ஆனால் அவர் நாடகங்களைப் பிரெஞ்சு மொழியில் எழுதினார். மரையா ரில்க் என்ற ஜெர்மானிய கவிஞர் ஸெக் நாட்டில் பிறந்தவர்; ஆனால் எந்த நாட்டுடனும் தன்னைத் தொடர்புபடுத்திக்கொள்ள மறுத்தார். அமெரிக்கரான டி.எஸ். எலியட் பிரிட்டிஷ் குடிமகன் ஆனார். ஜெர்மானியரான தாமஸ் மன் அமெரிக்காவில் குடியே

றினார். ஒரே நாட்டைச் சார்ந்த எழுத்தாளர்கள் பலமொழிகளில் எழுதுகின்றார்கள். ஸ்விட்சர்லாந்தை இதற்குச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம்.

4. தேசிய இலக்கியமும் ஒப்பிலக்கியமும்

தேசிய இலக்கியங்கள் ஒப்பிலக்கியத்தின் அடிப்படைக் கூறுகளாக இருப்பதால், ஒப்பிலக்கியத்தைத் தொடர்புபடுத்தியே தேசிய இலக்கியத்திற்கு இலக்கணம் வகுக்க வேண்டும் என்ற அறிஞர் வைஸ்டனின் கருத்து சரியானதே. ([6]). அவர் கூற்றின்படி. இவ்விலக்கணத்தின் அடிப்படை, மொழியியல் காரணங்களே தவிர. அரசியல் காரணங்களல்ல. ஏனெனில், வரலாற்றுச் சூழல்கள் ஒரு நாட்டின் அரசியல் எல்லைகளை அவ்வப்போது மாற்றக் காரணங்களாக அமைகின்றன. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் வங்கத்தை மேற்கு வங்கம் என்றும், கிழக்கு வங்கம் என்றும் பிரித்ததைச் சான்றாகக் காட்டலாம். இன்று கிழக்கு வங்கம். ஒரு தனி நாடு.

தேசிய இலக்கியங்களை மொழியியல் காரணங்களின் மூலம் பிரிப்பதில் உள்ள சில சிக்கல்களையும் மேலே விரிவாகப் பார்த்தோம். தேசிய இலக்கியத்தைச் சாராத மரையா ரில்க் போன்றவர்கள் ஒப் பிலக்கியத்திற்குப் பொருத்தமான ஆய்வுப் பொருள் ஆவார்கள் என்ற வைஸ்டனின் கருத்தைப் பலர் ஒப்புக் கொள்வர். இந்தியர்களால் ஆங்கிலத்தில் எழுதப்படும் நாடகம் கவிதை, கதையெல்லாம் ஆங்கில இலக்கியம் எனக் கொள்ளலாமா? அவர்களுடைய படைப்புகள் இந்தியப் பண்பாட்டு மரபையே எதிரொலிப்பதால், ஆர்.கே. நாராயணனையும் ஆங்கில நாவலாசிரியரான கிரஹம் க்ரீனையும் ஒப்பிட்டு ஆய்வு செய்வதை ஒப்பிலக்கியமாகவே கருதலாம். ஆங்கிலத்திலும் ஒரியாவிலும் கவிதைகள் எழுதும் ஜயந்தா மகபத்ராவையும் ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் பாக்கள் இயற்றும் கமலாதாஸையும் எப்படி நோக்குவது? இரண்டு மொழிகளில் அவர்கள் எழுதும் கவிதைகள் ஒரே கலாச்சாரத்தை எதிரொலிப்பதால், அவற்றை ஒப்பிலக்கியத்தின் வரையறைக்குள் அடக்க முடியாது. ஆனால் மகபத்ராவையும் கமலாதாஸையும் ஒப்பு நோக்கலாம். ஏனென்றால் ஒரியா கலாச்சாரமும் மலையாள கலாச்சாரமும் இந்திய கலாச்சார அடிப்படையில் தோன்றியிருந்தாலும், மொழிவகையிலும் பழக்க வழக்கங்கள் முறையிலும்

வேறுபாடுகள் உடையவை இவற்றை ஒப்புமை செய்வதால் இந்திய கலாச்சாரம் வேற்றுமைகளில் ஒற்றுமையுடையது என்ற உண்மையை வெளிக் கொணரலாம்.

ஒப்பிலக்கியம் என்ற பெயரில் சிலர் சில அபத்தமான கொள்கைகளைப் பரப்பி வருவது வருந்தத் தக்கது. ஒரு இந்திய மொழியை இன்னொரு இந்திய மொழியுடன் ஒப்பிடுவது இலக்கியமென்றும், ஆனால் ஒரு இந்திய மொழியை மற்றொரு அன்னிய மொழியுடன் ஒப்பிடுவதுதான் ஒப்பிலக்கியம் என்றும் கூறுபவர்கள், ஒப்பிலக்கிய இலக்கணத்தைச் சரிவரப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை இதை விட மோசமானது, டி. எஸ் எலயட் அமெரிக்கக் குடிமகனாக இருந்த பொழுது எழுதிய கவிதைகளையும் பிரிட்டிஷ் குடிமகனாக ஆனபொழுது எழுதிய கவிதைகளையும் ஒப்பிடுவதும் ஒப்பிலக்கியமே என்ற கூற்று அப்படியென்றால், எலியட்டைப் போலவே அவருக்கு முன்பு அமெரிக்காவில் பிறந்து இங்கிலாந்தின் குடிமகனான ஹென்றி ஜேம்ஸ் என்ற நாவலாசிரியரை எந்த நோக்கில் நாம பார்ப்பது? அவரை பொறுத்தவரையில் வேடிக்கை என்னவென்றால், அவர் அவருடைய கடைசி காலத்தில்தான் பிரிட்டிஷ் குடிமகனாக ஆனார்! அடிக்கருத்துயியல் (thematology) முறையில் இவ்விரு அமெரிக்க ஆசிரியர்களின் நூல்களை அராய்ந்தால் அவற்றில் அமெரிக்கக் கலாச்சாரம் ஊன்றியிருப்பதைக் காணலாம். அடிப்படைக் கருத்துக்களையே சரிவரப் புரிந்து கொள்ளாமல் சிலர் ஒப்புமைத் திறனாய்வு செய்வது நம் நாட்டில் ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு இடையூறு விளைவிப்பதாகும் தமிழை மையமாகக் கொண்டு ஒப்பிலக்கிய ஆய்வை நான்கு அடுக்கு நிலையில் செய்யலாம் என்ற பேராசிரியர் தமிழண்ணல் அவர்களின கூற்று வரவேற்கத் தக்கது: தமிழும் வடமொழியும்: தமிழும் ஏனைய தென்னிந்திய மொழிகளும்: தமிழும் ஏனைய இந்திய மொழிகளும் (கீழை ஆசிய மொழிகள் உட்பட); தமிழும் மேலைநாட்டு மொழிகளும் ([7]). இந்த வடிவமைப்பில் தமிழுக்குப் பதிலாக இலக்கியச் செழிப்புள்ள எந்த ஒரு இந்திய மொழியையும் பொருத்திக் கொள்ளலாம்.

5. ஒப்பிலக்கியக் கூறுகள் :

ஒப்பிலக்கியத்தை ஐந்து கூறுகளாகப் பிரிக்கலாம்; தாக்கமும் (influence) இணைவரையும் (analogy); இலக்கிய வரலாறும் அதன் கூறுகளும்; இலக்கிய வகைகள்; அடிக்கருத்து இயல்; மொழிபெயர்ப்பு.

இலக்கிய வரலாறும் இலக்கியத் திறனாய்வும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல; தொடர்புடையவை என்ற அடிப்படையில் இன்று ஒப்பிலக்கியம் இவ்வாறு பிரிக்கப்படுகிறது[8].

பெரும்பாலான ஒப்பிலக்கிய ஆய்வுகள் ஒரு இலக்கியத்திற்கும் மற்றொரு இலக்கியத்திற்குமுள்ள பலவிதமான தொடர்புகளைப் பற்றியவை ஒரு இலக்கியத்திற்கோ அல்லது ஆசிரியருக்கோ மற்றொரு நாட்டில் உள்ள செல்வாக்கு; ஒரு ஆசிரியர் அல்லது பல ஆசிரியர்களின் நூல்களில் வேறொரு நாட்டு ஆசிரியரின் தாக்கம்; ஒரு இலக்கிய இயக்கம் அல்லது சூழ மற்றொரு இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அடிகோலிய வகை; ஒரு நூலின் வெளிநாட்டு மூலங்கள் (sources) அதன் வளர்ச்சியைப் பாதித்த முறை போன்றவை ஒப்பிலக்கிய வாதிகளைக் கவர்ந்த தலைப்புகள். இதைத்தவிர, ஒருவிதத் தொடர்பு மற்ற இரு நாடுகளையும், வேறு வேறு காலங்களையும் சேர்ந்த இலக்கிய நூல்களை (சீவகசிந்தாமணியும் மில்டனின் சொர்க்க நீக்கமும்) ஆராய்வது, இலக்கிய இணைவரை ஆராய்ச்சி; இத்தகைய ஆய்வின் மூலம் இரு இலக்கியப் பாரம்பரியங்களுக்கும் கலாச்சாரங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிவுசார்ந்த முறையில் அறிய பெரும் வாய்ப்புண்டு.

இலக்கிய வரலாறு ஆசிரியர்களின் வாழ்க்கையில் வரும் முக்கிய தேதிகளை மட்டும் வைத்து எழுதப்படுவதன்று. அது வரலாற்றுக் கொள்கை, திறனாய்வுக் கொள்கை, எழுத்தாளர்களிடமும் அவர்களுடைய நூல்களிலும காணப்படும் தாக்கம் போன்ற பல கொள்கைகளைத் தன்னுள் அடக்கியது. இலக்கிய காலத்தைத் பழையகாலம், இடைக்காலம், இக்காலம் என்றும், நூற்றாண்டுகளாகவும் பிரிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. இச்சிக்கல்களை ஆராய்ந்து சிறந்த முறையில் இலக்கிய வரலாற்றை எழுதுவதற்கு ஒப்பிலக்கிய அறிஞர்கள், முக்கியமாக ஜெர்மானியர்களும் அமெரிக்கர்களும், பல வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறார்கள்.

அரிஸ்டாடில் காலந்தொட்டே இலக்கிய வகைகள் சர்ச்சைக்கு உள்ளவைகளாகி விட்டன. பிற்காலத்தில் பழைய இலக்கிய வகைகள் சில மறைந்து புதியவை தோன்றின. மற்றும் பழைய இலக்கிய வகைகள் புதிய பெயர்களுடன் விளங்கின. பல இலக்கிய வகைகள் ஒரே நூலில் இடம் பெறத் தொடங்கிய காலந்தொட்டு இலக்கியத்தை

வகை செய்வது நியாயந்தானா என்ற கேள்வியையும் அறிஞர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இதைத்தவிர சில இலக்கிய வகைகள் சில இலக்கியங்களுக்கே உரியவையாகிப் பரிமளிக்கவுஞ் செய்கின்றன. இத்தகைய பிரச்சனைகளை ஒப்பிலக்கியம் ஆழ்ந்த முறையில் ஆராய்கிறது.

உட்கருத்து இயல் இந்நூற்றாண்டில் தோன்றிய இலக்கியத் திறனாய்வுக் கலை ஆனால் அது வெகுவாக வளர்ந்து விட்டது. ஒரு நூலில் சில அடிக்கருத்துகளும், கொள்கைகளும், எண்ணங்களும், பாத்திரங்களும் திரும்பித் திரும்பி வருவதன்மூலம் நூலின் உள்அமைப்பைச் செறிவு பெறச் செய்து. ஆசிரியரின் மற்ற நூல்களுடனேயோ அல்லது அதைச் சார்ந்த இலக்கியத்துடனேயோ தொடர்புபடுத்தி நூலுக்கு ஆழ்ந்த கருத்து இருப்பதைக் கோடி காண்பிக்கின்றன இந்த ஆழ்ந்த கருத்தை வாசகர்களுககு வெளிப்படுத்துவது. திறனாய்வாளனின் தலையாய கடமைகளுள் ஒன்று. உட்கருத்து இயலைச் சேர்ந்த அடிக்கருத்துகள் ஒரு இலக்கியத்திலிருந்து மற்றொரு இலக்கியத்திற்குப் பரவுவதை ஒப்பிலக்கியவாதி ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றான். இந்திய நாட்டு இலக்கியங்களை எடுத்துக் கொண்டால் இராமாயண மகாபாரதங்களின் காலந்தொட்டு இன்றுவரை தந்தை-தனயன் உறவு, தனயன்-மாற்றாந்தாய் மோதல், பெண் கற்பு, பெண்ணைப் பணயம் வைத்துச் சூதாடுதல் பங்காளிகளுக்குள் சச்சரவு, நாடு கடத்தப் படுதல், தூயமனிதன்இக்கட்டான நிலையினைச் சமாளித்தல், நல்லவர்களை நசுக்க விரும்பும் கொடியவன். கொடியவர்களை அழிக்கும் நல்லவன் போன்ற உட்கருத்துகள் பல உருவங்களில் எல்லா இலக்கிய வகைகளிலும் தெரிந்தோ தெரியாமலோ நூலாசிரியர்களால் கையாளப்படுகின்றன. இவற்றை ஆராய்வதன் மூலம் ஒப்பிலக்கிய அறிஞன் ஒரு இலக்கியத்தின் எழுத்து வடிவத்திற்கும் கருத்துக்கோவைக்கும் ஒரு ஆழ்ந்த ஒற்றுமையிருக்கிறது என்பதை நமக்கு உணர்த்துகின்றான்

மொழிபெயர்ப்புகள் இன்றியமையாதவை. ஏனென்றால், அவைகள் மூலம்தான் உலகின் பல பகுதிகளிலும் உள்ள வாசகர்கள் மற்ற இலக்கியங்களைப் படித்து மகிழ முடிகிறது. இதனால் மொழிபெயர்ப்புகள் ஒரு இலக்கியத்திற்கும் இன்னொரு இலக்கியத்திற்கும் இடையே ஒருபாலமாக அமைகின்றன. மொழிபெயர்ப்பு ஒருகலை; ஒரு நூலை அதன் மூலமொழியிலிருந்து வேறொருமொழிவழி பெயர்ப்பதில்

பல சிக்கல்களும் பிரச்சனைகளும் அடங்கியுள்ளன. அவற்றைப் புரிந்து கொள்ளுவதற்கு அறிவுத் திறனும், இரண்டு மொழிகளிலும் நல்ல பயிற்சியும் மொழிபெயர்ப்பாளருக்கு இருக்க வேண்டும். வெறும் முதுகலைப் பட்டங்கள் உள்ளவர்களெல்லாம் மொழிபெயர்ப்பதில் உள்ள பிரச்சனைகளை அணுகாமல் உணர்ச்சிவசப்பட்டோ வெறும் ஆவலால் உந்தப்பட்டோ மொழிபெயர்ப்புச் செய்ய முன்வந்தால் அது அந்தக் கலையின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் மொழிபெயர்ப்புக்கலையையும் பிரச்சனைகளையும் ஒப்பிலக்கியம் சிறந்தமுறையில் விவாதிக்கிறது.

ஒப்பிலக்கிய வழிமுறைகளைப் பற்றிய இக்கட்டுரையிலிருந்து இந்தியர்களும் தமிழர்களுமான நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இவ்விலக்கியப் பாடமுறை நம் தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியங்களைப் புரிந்து கொள்ள வழிவகுப்பது மில்லாமல் இந்தியாவின் இலக்கிய வளர்ச்சியில் அதனுடைய பங்கு என்ன என்பதையும் அறிந்துகொள்ளப் பெரிதும் உதவும்.

அடிக்குறிப்புகள்

1. Henery H. H. Remak, "Comparative Literature: Its Definition and Fuaction'. **Comparative Literature: Method and Perspective**, ed. Newton P. Stall Knecut & Horst Frenz (rev. ed. 1961; Carbondale & Edwardsville: Southern Illinois University Press, 1973), p.23.

2. இவ்விருசாரார்களுடைய கருத்துக்களின் ஒற்றுமை - வேற்றுமைகளுக்கு, பார்க்க: Henry H.H. Remak "Comparative Literature at the Crossroads: Diagnosis, Therapy and Prognosis". **Yearbook of Comparative and General Literature**, 9 (1960), 1-14.

3. பார்க்க: (i) Calvin S. Brown: **Music and Literature: A Comparison of the Arts** (Athens: University of Georgia Press, 1948); (ii) Helmut Hatz-feld. **Literature Through Art: A New Approach to French Literature.** (New York Oxford University Press, 1952).

4. Francois Jost, **Introduction to Comparative Literature** (Indianapolis & New York : Pegasus 1974) p.22.

5. இந்நாட்டிலுள்ள எழுத்தாளர்கள் காலப்போக்கில் முருகியல் நோக்கிலும் கலாச்சார அடிப்படையிலும் திசை திரும்பலாம் என்பதை நான் இங்கு மறுக்கவில்லை.

6. Ulrich Weisstein, **Comparative Literature and Literary Theory : Survey and Introduction** (Bloomington: Indiana University Press, 1973), p. 11-14.

7. தமிழண்ணல் [இராம. பெரிய கருப்பன்], **ஒப்பிலக்கிய அறிமுகம்** (மதுரை: மீனாட்சி புத்தக நிலையம், 1973), ப: 87.)

8. அடிக்குறிப்பு 1, 4 & 8-இல் குறிப்பிடப்பட்ட நூல்கள் ஒப்பிலக்கியத்தை பற்றி அறிய ஆவல் உள்ளவர்களுக்குப் பெரிதும் பயன்படும்

உரையாசிரியர்களின் உரைகளில் முரண்பாடுகள்

-டாக்டர் மு. மணிவேல், தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

1) தொல்காப்பியரின் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள களவியல் பகுதியில் வரும்,

''பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப'' (தொல். பொ., 101)

''முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே'' (தொல் பொ., 102)

''பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே'' (தொல். பொ. 103)

''முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே'' (தொல். பொ., 104)

என்னும் நூற்பாக்களுக்கு உரையாசிரியர்களாகிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் சில விளக்கங்களைத் தருகின்றனர். அவர்கள் தரும் விளக்கங்கள், தொல்காப்பியர் கூறும் பிற சில நூற்பாக்களை ஒப்புநோக்கும் பொழுதும் அவ்வுரையாசிரியர்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஆங்காங்கு எழுதியுள்ள உரைகளை ஒப்புநோக்கும் பொழுதும் முரண்பாடுகள் உடையனவாகக் காணப்படுகின்றன.

''மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே''
(தொல். பொ., 89)

எனக் கூறுகின்ற தொல்காப்பியர், 'மறையோர் தேயத்து மன்றல் எட்டு' எனக் குறிப்பிடுவன எவையெவை எனக் கூறவில்லை. எனினும் உரையாசிரியர்கள், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம். இராக்கதம், பைசாசம் என வடமொழி நூல்கள் கூறுகின்ற மணமுறைகளில் ஒத்த இருவர் கூடும் கூட்டம் காந்தருவ மணம்' என்று கூறி, இதுவே தொல்காப்பியர் ஐந்திணைக்

உரையாசிரியர்கள், மன்றல்கள் எட்டினை 1. பிரமம் 2. பிரசாபத்தியம். 3. ஆரிடம், 4. தெய்வம், 5. காந்தருவம். 6 அசுரம். 7. இராக்கதம், 8. பைசாசம் என்ற நிலையில் வரிசைப்படுத்துகின்றனர். (இளம்., தொல். பொ. ப. 159; நச்., தொல். பொ., ப. 304). இதன்பின் 'முன்னைய மூன்று' என்பதற்குப் பின்னுள்ள மூன்றைக் காட்டி இவை கைக்கிளை எனவும். 'பின்னர் நான்கு' என்பதற்கு முன்னுள்ள நான்கையும் காட்டி இவை பெருந்திணை எனவும் உரை எழுதியுள்ளனர் 'முன்னைய' என்பதற்கு, 'இதன் முன்னுள்ள மூன்று' எனப் பொருள் கொண்டாலுங் கூட அவை மூன்றின் பொருள்களும் தொல்காப்பியர் கூறுகின்ற அகப்பொருள் பொருண்மைக்கு முற்றிலும் வேறுபட்டவனவாகக் காணப்படுகின்றன.

'கைக்கிளை புணராது நிகழும்' என்றும். 'மடலேறாத்திறம், இளமை தீராத்திறம், தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்து மாறாகாத்திறம் என்பன கைக்கிளையின் பொருள் நிலைகள்' என்று அகத்திணையியலில் உரை எழுதுன்ற இளம்பூரணர் (இளம்., தொல். பொ., ப 69). கொல்லேற்றினை அடக்கியானுக்கும், திரிபின்றி அம்பெய்தானுக்கும் மகள் கொடுத்தலைக் கூறுகின்ற அசுரத்தையும் தலைவி விருப்பில்லாதபோது தலைவன் தலைவியை வலிந்து பெறுகின்றமையைக் கூறுகின்ற இராக்கதத்தையும், தன்னினும் மூத்தோரிடத்தும். கள் குடித்துக் களித்தோரிடத்தும், துயின்றோரிடத்தும் உறவு கொள்ளுதலைக் கூறுகின்ற பைசாசத்தையும் (பேய்நிலையையும், கைக்கிளையெனக் கூறுதல் பொருந்துவதாக இல்லை.

தொல்காப்பியர் தமிழ் மாந்தரின் காதல் வாழ்விற்கு இலக்கணம் கூறுகின்றாரேயன்றி வடநாட்டு மாந்தரின் காதல் வாழ்விற்கு இலக்கணம் கூறினாரிலர். வடநாட்டுக் காதல் வாழ்வின் நிகழ்வுகள் எல்லாவற்றையும் தமிழ் மாந்தரின் காதல் வாழ்வுகள் அனைத்திற்கும் தொடர்புபடுத்தியும் இணைத்துப் பார்த்தும் அவர் நூற்பா செய்யவில்லை மேலும் அது அவரது நோக்கமுமன்று தொடர்புடையனவற்றை மட்டுமே குறிப்பிடுவது அவர் நெறி அவ்வாறே அவர் காந்தருவத்தை ஐந்திணைக் காதலரின் கூட்டத்தோடு ஒப்பிடலாம் எனக் கூறுகின்றார் ஆனால் உரையாசிரியர்கள் எட்டுவகை வடநாட்டு மணங்களையுமே தமிழ் மணங்களாகத் தொடர்புபடுத்துகின்றனர்.

இளமை தீர்ந்து முதுமை எய்தியோரிடத்தும் கொள்ளுகின்ற காதலையும், விருப்பில்லாதவரை வலிதிற் சென்றடைதலும் பெருந் திணைக்குரியன எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (தொல் பொ. 54) எனவே இந்நிகழ்வுக்குரிய பைசாசம், இராக்கதம் என்பன- வற்றை ஒருகால் பெருந்திணைக்குரியனவென ஒப்பீடு செய்யலாமே- யன்றிக் கைக்கிளைக்குக் கூறுதல் பொருந்துமாறில்லை.

2) தொல்காப்பியர். அகத்திணைகள் ஏழு எனச் சொல்லி, அவற்றுள் ஐந்திணைகளைப் பிறிதாகக் காட்டி, அவ்வைந்திற்கும் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் உண்டு எனச் சொல்லி, ஒவ்வொன்றின் முதற்பொருளையும் உரிப்பொருளையும் தனித்தனியாகக் கூறி, இறுதியில் கருப்பொருளைச் சுட்டுகின்ற நிலையில் மாந்தரைக் கருப்பொருள்களினின்று தனித்துக்கூறி, காதல் மாந்தர்கள் குலப்பெயராலும் தொழிற் பெயராலும் சுட்டப்படுவர் என்றும் கூறுகின்றார். இதன்பின் தலைமை மாந்தராக வருவோர் இன்னார் என நான்கு நூற்பாக்களில் கூறுகின்றார். அவை,

''ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே (தொல். பொ., 23)

'ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே'' (தொல் பொ., 24

''அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்''
(தொல் பொ., 25)

''ஏவல் மரபில் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்''
(தொல். பொ., 26)

என்பனவாகும்.

இவையெல்லாம் தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை களுக்குப் பொருண்மை விளக்கம் (உரிப்பொருள் விளக்கம்) கூறுகின்ற நூற்பாக்களுக்கு முன்னதாகவும், அன்பின் ஐந்திணைகளுக்கு உரிப்பொருள் கூறுகின்ற நூற்பாக்களுக்குப் பின்னதாகவும் அமைந்- துள்ளன. இந்நூற்பாக்கள் ஐந்திணைகளின் உரிப்பொருள் கூறும்

நூற்பாக்களுக்குப் பின் தொடர்ந்து காணப்படுவதால் அன்பின் ஐந்திணைகளுக்குரிய காதல் மாந்தரை மட்டுமே தொல்காப்பியர் இங்கே இந்நூற்பாக்களின் வாயிலாகக் கூறியிருக்கிறார் எனக் கொள்ளலாம். இக்கருத்தினைச் சோமசுந்தர பாரதியாரும் வலியுறுத்துகின்றார். (தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை (அகத்திணையியல்) பக். 67-83). எனினும் மேற் கூறிய நூற்பாக்களில் திணையும் திணைக்குரியோரும் தனித்தனியே இன்னார் எனக் குறிப்பிட்டுச் சொல்லப், படவில்லை. ஆகவே, 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல். பொ., 1)' என முதல் நூற்பா செய்து பின்னர் காதலுக்குரிய தலைமை மாந்தரைக் கூறுதலால் மேல் நூற்பாக்களில் கூறப்பட்டோர் எல்லோரும் எல்லாத் திணைகளுக்கும் பொதுப்படவே குறிக்கப்பட்டுள்ளனர் எனக் கொள்ளுதற்கு இடமுள்ளது.

கைக்கிளையினை, பெருமையில்லாத தலைமக்கள் உறவு என எழுதுகின்ற இளம்பூரணரும் (இளம், தொல். பொ. ப 6) 'காமஞ் சாலா இளமையோள்வயின் எனப் பொதுப்படக் கூறிய அதனால் வினைவல பாங்காயர்க் கண்ணும் இவ்விதி கொள்க' என எழுதுகின்ற நச்சினார்க்கினியரும் (நச்., தொல். பொ., ப. 117)

> "அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்"
>
> (தொல் பொ., 25)

என்ற நூற்பாவிற்கு உரை எழுதுகின்றபொழுது, 'கைக்கிளை பெருந்திணைக் காதற்குரியோர் இன்னார் எனக் கூறுவதற்குச் செய்த நூற்பா இது எனக் கூறுகின்றனர் (இளம்., தொல். பொ, ப 27; நச், தொல், பொ, ப. 32). இந்நூற்பாவின் இறுதியடியில் வருகின்ற 'புறத்து' என்ற சொல்லால் நடுவணைந்திணைப் புறத்து நின்ற கைக்கிளை, பெருந்திணை என்று பொருள் கொண்டு இவர்கள் உரை எழுதியிருக்கின்றனர்.

தொல்காப்பியர் ஒரே பொருள்பற்றி வருகின்ற நூற்பாக்களைக் கூறுகின்றபொழுது ஒன்றோடு ஒன்றினைத் தொடர்புபடுத்திக் கூறுவார். அவர் முதல் நூற்பாவில் கூறப்படாதவற்றை அடுத்த நூற்பாவில் கூறுவார் (தொல். பொ, 15, 102, 103). இந்நிலையில் இந்நூற்பாவில் வருகின்ற 'புறத்து' என்ற சொல்லிற்கு 'நீங்கிய' என்ற

பொருள்கொண்டு மேலே கூறப்பட்ட நூற்பாக்களில் (தொல். பொ., 23, 24) ஆயர் வேட்டுவர், இவர்கள் நீங்கிய ஏனைய திணைப்பெயர் ஆடவர் ஆகியோரைக் கூறி அவர்கள் நீங்கிய அடியோர், வினைவலர் ஆகியோரும் ஐந்திணைக் காதலுக்குரியோர் எனத் தொல்காப்பியர் இந்நூற்பாவில் (தொல். பொ., 25) கூறுகிறார் எனக் கொள்ளலாம்

தொல்காப்பிய உரையாசிரியர்கள். கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் தொல்காப்பியர் உரிப்பொருளை மட்டுமே கூறுகிறார் என்ற எண்ணத்தில், 'முதற்பொருள் கருப்பொருள் இல்லாக் கைக்கிளை, பெருந்திணை' என்றே உரை எழுதுகின்றனர் (இளம், தொல். பொ., ப 21; நச் , தொல் பொ , ப 115) எனவே, இவர்களின் கூற்றுப்படி கருப்பொருளில் அடங்கும் காதல் தலைமை மாந்தரைப் பற்றிக் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் தொல்காப்பியர் கூறியிருப்பாரா என்பது ஐயத்திற்குரியதாகவே உள்ளது. 'மக்கள் நுதலிய அகன்ஐந்திணையும்' (தொல் பொ , 57) என வரும் தொல்காப்பியரது நூற்பா அடியே 'மக்கள் நுதலா 'கைக்கிளை பெருந்திணை' என்பதனைக் கூறுவதாகத் தோன்றுகின்றது. இவ்வாறிருக்க உரையாசிரியர்கள் மேற்காட்டிய தொல்காப்பியர் நூற்பாவில் கூறப்பட்டிருக்கின்ற மாந்தரைக் கருப்பொருளில்லாக் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் உரியர் என்று கூறுதல் பொருந்துவதாக இல்லை. எனவே இவர்களுடைய கருத்தில் முரண்பாடு இருக்கின்றதென்பது தெளிவாகத் தெரிகின்றது. இவர்களின் இம்முரண்பாட்டிற்குக் காரணம் இவ்வுரையாசிரியர்கள் தங்களின் காலக் கண்ணோட்டத்தோடு தொல்காப்பியரது நூற்பாக்களுக்குப் பொருள் விளக்கம் செய்ய முற்பட்டமையாகும் என்று கருதமுடிகிறது

கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் கருப்பொருளும் முதற்பொருளும் தொல்காப்பியர் கூறவில்லை என்றாலும், கருத்தாவும், களமும், காலமும் இல்லாதபொழுது இவற்றின் உரிப்பொருள்கள் எங்ஙனம் நிகழும்? தொல்காப்பியர் ஏழு திணைகளுக்குரிய ஒழுக்கங்களை (உரிப்பொருள்களை)க் கூறுகிறார் அவற்றுள் நான்கனுக்கு (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றிற்கு) மட்டுமே நிலம் கூறுகிறார் இதனால் ஏழு அகவொழுக்கங்களும் இந்நான்கு நிலங்களுக்குள்ளேயே நடக்கவேண்டும் எனவேபிற திணைகளுக்குரிய கருப்பொருளும் முதற்பொருளும் கைக்கிளை பெருந்திணைகளுக்குமுரியன என்றேகொள்ளவேண்டும். ஆதலினால்தான் தொல்காப்பியர்

ஐந்திணைகளுக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை விளக்கியபின் அவற்றோடு தொடர்புடைய கைக்கிளை, பெருந்திணைகளை இறுதி நிலையிலேயே சொல்லியிருக்கிறார். எனவே அன்பின் ஐந்திணை மட்டுமன்றிக் கைக்கிளை, பெருந்திணை என்றும் இரண்டு திணைகளையும் கருத்திற் கொண்டே தொல்காப்பியர் அகத்திணையியலை எழுதியிருக்கிறார் என எண்ண முடிகிறது. இவற்றால் பிறதிணைகளுக்குரிய தலைமை மாந்தர்களே கைக்கிளைக்-குரியோர் என்பதும் கைக்கிளை எல்லாரிடத்தும் நிகழும் என்பதும் தெளிவாகின்றன.

3. கலித்தொகையில் அமைந்துள்ள முல்லைக்கலியின் இரு பாடல்களின் கீழ் (கலி., 112. 11.), 'இது வினைவல பாங்கிற் றலைவியை ஆற்றிடைக் கண்டு வினைவல பாங்கற் றலைவன் விலக்கி நகையாடி இருவருஞ் சிலமொழி கூறியவழி அவள் கூட்டத்திற்கு உடம்பட்டது. இது கைக்கிளை' (நச்., கலி, ப 358) எனவும், 'இது வினைவல பாங்கிற் றலைவியை ஆற்றிடைக் கண்டு அவளை வினை-வல பாங்கிற் றலைவியை விலக்கி அவளோடு சிறிது கூறியவழி அவள் கூடலுறுகின்றாள் கூறியது இது கைக்கிளை' (நச்., கலி 11 36.) எனவும் நச்சினார்க்கினியர் எழுதுகின்றார் இவரே 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (தொல். பொ., 15) என்றும் தொல்-காப்பிய நூற்பாவிற்கு

"கல்லாப் பொதுவினை நீமாறு" (கலி., 112)

எனப் பொதுவியர் கூறலும்,

"நாடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின்
விடாஅலோம் பென்றா ரெமர்" (கலி., 112)

எனப் பொதுவர் கூறலும் மிக்க காமத்து மிடலாகிய பெருந்திணை யாகலின் முல்லையுட் கோத்தார்' (நச்., தொல். பொ., பக் 35, 36) என மேலே கைக்கிளை எனக் கூறிய கலித்தொகைப் பாடல் ஒன்றின் அடிகளை எடுத்துக்காட்டுகின்றார். இதனால் இவருடைய தொல்காப்பிய உரைக்கும் கலித்தொகையின் நூற்றிப் பன்னிரண்டாம் பாடல் உரைக்கும் முரண்பாடு இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

நச்சினார்க்கினியர் கைக்கிளையெனக் காட்டுகின்ற முல்லைக்கலிப் பாடலொன்றில் (கலி., 112), தன்னைத் தடுத்து நிறுத்திய தலைவன் (வினைவல பாங்கன்) ஒருவனிடம் தலைவி (வினைவல பாங்கி) ஒருத்தி 'கல்லாப் பொதுவனே? உன்னோடு பேசவேண்டாம் என என்னுடைய சுற்றத்தார் கூறினர் (கலி, 112: 3-4) என்று கூறுகின்றாள்: அதற்கு அத்தலைவன். 'நோய் செய்த தோளரைக் (தலைவியைக்) காணின் அவரைவிடாது அவர் செய்த நோயினை அவராலே தவிர்த்துக்கொள்க என என்னுடைய சுற்றத்தார் கூறினர்' (கலி., 1'2 : 5-7) என்று கூறுகின்றாள். அத்தலைவி, 'நின் பெற்றோர் செயல் நானறிந்ததே: என்னைச் செல்லுதற்கு வீடு (கலி., 112: 11, 15) என்று கூறுகின்றாள்; அத்தலைவன், நின் பெற்றோர் சொல்லாடாது நிற்கவெனக் கறினாரேயன்றிப் புல்லாது நிற்கவெனக் கூறினாரல்லர்? முயங்குகநின் முள்ளெயிறுண்கும்' (கலி, 112: 11-20) என்றெல்லாம் கூறி மிக்க காமத்தால் அவளைக் கூடுகின்றான்.

நச்சினார்க்சினியர் கைக்கிளையெனக் கூறுகின்ற பிறிதொரு முல்லைக்கலிப் பாடலொன்றின் (கலி., 113) தலைவன், 'உன்மீது கொண்ட காதலால் வருந்தியிருக்கும் நோயினின்றும் நான் உய்யும் நெறியினை எனக்குக் கூறிய பின் நீ செல்' (கலி., 113: 2-3) எனத் தலைவியிடம் கூறுகின்றான்; அவளோ, 'என்னிடத்துக் காமப் பித்தேறியவனாக இருக்கின்ற நீ யார்?' (கலி., 113: 4-5) என வினைவுகின்றாள்; 'புல்லினத்து ஆயர் மகன் நான்' (கலி., 113:7) எனக் கூறுகின்றான் தலைவன்; புல்லினத்து ஆயன் நீயாயின், குடஞ்சுட்டு நல்லினத்து ஆயன் மகள் நான்' (கலி., 113: 9-10) என்று கூறி, 'இப்போது என்னைப் போகவிடு' (கலி., 113: 13) என்கிறாள் தலைவி; 'நின்னைப் போகவிடேன்' (கலி., 113: 14) என்று கூறி, 'நல்லேறு நாகுடன் சேர்ந்திருப்பதுபோல நாமும் சேர்ந்திருப்போம் (கலி., 113: 28-29) எனக் கூறுகின்றான் தலைவன்.

மேலே கூறப்பட்டுள்ள பொருள் நிலைகளைக் கொண்டுள்ள அவ்விரண்டு பாடல்களும் (கலி., 112, 113,) மிக்க காமத்து மிடலொடு கூடுதலாகத் தொல்காப்பியர் கூறுகின்ற பெருந்திணைக்கு (தொல். பொ. 54) உரியனவாகக் கொள்வதற்குப் பொருந்துவன வேயன்றிக் கைக்கிளைக்கு உரியனவாகக் கூறுதல் பொருந்துவதாக இல்லை.

4. சீவக சிந்தாமணியில் குணமாலையார் இலம்பகத்தில், சீவகன் குணமாலை என்பாளை மணம் செய்வதற்கு முன் குணமாலை அவன்மீது கொண்ட ஒருதலைக் காதல் கூறப்படுகின்றது (சிந்., 908 முதல் 1001 வரையுள்ள பாடற் செய்திகள்)

குணமாலையும் சுரமஞ்சரியும் தந்து அனுப்பிய சுண்ணப்-பொடிகளை அவர்களது தோழியர் சீவகனிடத்தில் காட்டி, 'இப்-பொடிகளில் சிறந்தது எது' எனக் கேட்டு நின்றனர் (சிந்., 884), சீவகன் அவர்கள் காட்டிய பொடிகளில் 'குணமாலையின் சுண்ணப்-பொடியே சிறந்த'தென உரைத்தான் (சிந்.,893-897). இச்செய்தியினைத் தோழியர்கள் குணமாலையிடத்துச் சென்று கூறியதும் அப்பொழு-திருந்தே அவள் சீவகன்மீது காதல் கொண்டவளாக ஆயினாள். பின்பு ஒருநாள் சீவகன், கட்டுத்தறியை முறித்து, பாகனுக்கு அடங்காமல் குணமாலைக்கு எதிரே சினந்து வந்த அசனிவேகம் என்னும் பட்டத்து யானையிடமிருந்து அவளைக் காத்தான் (சிந்., 985). முன்னரே சீவகனிடத்துக் காதல்கொண்டிருந்த குணமாலை அவனை நேரில் கண்டதும் அவன்மீது மிக்க காதல்கொண்டவளாய், 'சீவகனைத் தன்பால் கொண்டுவந்து சேர்ப்பீர்' எனத் தன் தோழி-யரிடத்துக் கூறினாள்:

குணமாலை சீவகன்மீது கொண்ட காதலால் அவளது கண்கள் ஒளி இழந்தன; கைவளைகள் சோர்ந்தன; நெஞ்சம் புண்ணாகிப் புலம்பியது. இதனால் 'பெண்ணினும் பெருந்துயர் எய்தும் பிறிது பொருள் இவ்வுலகில் இல்லை' (சிந்., 998) என அவள் பேசுகின்றாள். மேலும் அவள், தான் வளர்த்த கிளியைச் சீவகனிடத்துத் தூது சென்று தன் காதலைக் கூறிவருமாறு வேண்டுகின்றாள்.

சீவகனுக்குக் குணமாலையை மணமகளாக்கிய செய்தியும், சீவகன் குணமாலையை மணந்த செய்தியும் குணமாலையார் இலம்பகத்தின் பிற்பகுதியில் கூறப்படுகின்றன (சிந்., 1062, 1063). சீவகன் குணமாலையை மணப்பதற்குமுன், அவன் அவளிடத்துக்-காதல் கொண்டதாகப் பாடல்களில் காணப்பெறவில்லை; குணமாலை சீவகன்மீது கொண்ட காதல் மட்டுமே கூறப்படுகின்றது. இந்நிலை-யில் குணமாலை சீவகன்மீது கொண்ட காதல் கைக்கிளை உறவு எனக் கூறுவதற்குரியதாக உள்ளது. இது அகப்பொருள் நிலையில் அமைந்த பெயர் சுட்டிவந்த பெண்பாற் கைக்கிளையாகும். இது பாடாண்திணைப் பொருளாக வந்த கைக்கிளை அன்று.

குணமாலையின் காதல் பற்றி நச்சினார்க்கினியர், 'ஈண்டுக் கூறியது, புலனெறி வழக்கமல்லாத காந்தருவமாய் அசுரத்தின்பாற்படும் கைக்கிளை (நச். சிந்., ப. 503) என எழுதுகின்றார். அசுரம் என்பதற்கு, கொல்லேறு கோடல், திரிபின்றிச் செய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து கோடல் என இவ்வுரையாசிரியரே தொல்காப்பியப் பொருளதிகார உரையில் எழுதுகின்றார். நச்சினார்க்கினியர் அசுரம் என்பதற்குக் கூறும் பொருள்நிலையிலிருந்து நோக்கும்பொழுது சீவகசிந்தாமணியில் கூறப்படுகின்ற குணமாலையில் கைக்கிளை உறவினை அவர் (நச்சினார்க்கினியர்) அசுரத்தின்பாற்படும் கைக்கிளையாகக் கூறுதல் பொருந்துவதாக இல்லை. முரண்பாடாக உள்ளது.

வினையில் வரும் சாரியை

பா. மல்லிகா,
தமிழ் ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பொதுவாகச் சாரியைகள் பெயர்களிலும், வினைகளிலும் அமைந்து வரும். தமிழ் இலக்கண நூற்கள் சாரியையினைச் சுட்டி யிருப்பினும் வினைச் சொற்களில் வரும் சாரியையினைப் பகுத்துக் கூறவில்லை. சாரியைகளில் சில வினைச்சொற்களில் அமையும். அச்சாரியைகள் எவை என இலக்கணநூற்களின் வாயிலாகக் கண்டறிந்து, அவை பொருளுடையனவா என்று கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பத்து தமிழ் இலக்கண நூற்களுள் 'பிரயோக விவேகம் தவிர ஏனையவை சாரியையினைக் குறிப்பிட்டு உள்ளன. வீரசோழியம், இலக்கணக்கொத்து என்னும் இரண்டு நூற்களும் சாரியையினை இடைச் சொல்லின் வகையாகக் கொள்ளவில்லை. ஆனால் சாரியை களின் வருகை முறையை அவை குறிப்பிட்டு உள்ளன. வீரசோழியம்,

> "துப்பார் பெயர்வேற் றுமையி னகத்துந் தொகையின் கண்ணுஞ்
> செப்பார் மொழிமுதற் பின்சாரி யைவரிற் றேர்ந்தவற்றுள்
> ஒப்பார் மொழியீ றுயிரொடும் போமொரு காலுடல்போம்
> தப்பா வுயிர்மெய் கெடுமொரு காலென்பர் தாழ்குழலே
> — 27.

என்னும் நூற்பா வாயிலாகச் சாரியையின் வருகைமுறையைக் கூறி உள்ளது.

இலக்கணக் கொத்து எழுத்துச்சாரியையினைப் பற்றி மட்டுமே கூறிச் செல்லும். இதனை

> "ஓரெழுத் திற்கே யொருசா ரியையு
> மோரெழுத் திற்கே பலசா ரியையும்
> பலவெழுத் திற்கே யொருசா ரியையுந்
> தொடர்ந்தபல் லெழுத்திற் கொருசா ரியையுஞ்

சாரியை யின்றித் தனித்துந் தொடர்ந்துந்
தொடர்பினும் சாரியை கலந்து தோன்றியும்
வருமென மொழிப வழக்கறிந் தோரே —104.

என்ற நூற்பா எடுத்தோதும். பதபதவிலக்கணம் கூறும்போதும் இந்-நூல் சாரியையினைச் சுட்டியுள்ளது (நூ. 117); ஆனால் அச்சாரியை. பெயர்வழிச் சாரியையினையா, வினைவழிச் சாரியையினையா குறிக்கும் என்று தெளிவாகச் சுட்டவில்லை.

சாரியையினை இடைச்சொல்லின் வகையுள் ஒன்றாகக் குறிப்-பிடும் நூற்கள் ஏழ. அவை தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமி-நாதம் ஆகியன (தொ.சொ. 250; நே. 75; ந 420 ; இ.வி. 251; தொ.வி. 130; மு வீ. 614 சு.54). அவ்வாறு இடைச்சொல்லின் வகையுள் ஒன்றாகச் சாரியையினைக் குறிப்பிடாத நூற்கள் மூன்று. அவை வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து ஆகியன. அம்மூன்று நூற்களும் இடைச்சொல் பற்றித் தனியே விரித்துக் கூறவில்லை.

சாரியை வினையில் அமைந்து வருமெனக் குறிப்பிடும் நூற்கள் நான்கு. அவை நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, சுவாமிநாதம் ஆகியன. நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டு நூற்களும் இச் சாரியையினைப் பதவியலில் கூற, இலக்கணக் கொத்து ஒழிபியலில் கூற, சுவாமிநாதம் பதமரபில் கூறும். ஏனைய இலக்கண நூற்கள் வினைவழிச் சாரியையினைத் தனியே பிரித்துக் கூறவில்லை. 'வினைசெயல் மருங்கின் காலமொடு வருந' என்னும் தொல்காப்பியத் தொடர் இதனை அடக்கும் என்று எண்ணத் தோன்று கிறது ஆனால் உரைகாரர்கள் இத்தொடர் உணர்த்தும் பொருளை வெவ்வேறு முறையில் கொண்டுள்ளனர்.

இளம்பூரணர் இத்தொடர் வினைவிகுதிகளை மட்டும் குறிக்கும் என்பார் (நூ. 245). சேனாவரையர் இத்தொடர் காலங்காட்டும் இடைநிலைகளைக் குறிக்கும் என்பார் (நூ. 250). நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் முதலியோர் இத்தொடர் வினை-விகுதிகளையும், கால இடைநிலைகளையும் குறிக்கும் என்பர் (நூ. 252, 247, 252). ஆனால் இத்தொடர் வினையிபலைக் கால இடை

நிலைகளோடு அடுத்து வரும் சாரியை, விகுதி என்பவைகனளயும் அடக்கும் என்று பொருள் கொள்ளவும் வழியளிக்கிறது.

ஏனைய இலக்கணநூற்களும் வினைவழிச் சாரியையினை ஏற்றுக் கொண்டுள்ளன என்பதை அந்நூற்கள் கூறும் குறிலுயிரை முதலாகவுடைய வினைமுற்று விகுதிகளால் அறியலாம். குறிலு-யிரை முதலாகவுடைய வினைமுற்று விகுதிகள் சாரியையினை அடுத்தே அமைந்து வரும். இக்கருத்து வீரசோழிய ஆசிரியரான புத்தமித்திரனாருக்கும் உடன்பாடே. ஆனால் அவர் சாரியையினையும் இணைத்தே வினைமுற்று விகுதியாகக் கொண்டுள்ளார். அது, அன-என்பதைப் படர்க்கை அஃறிணை விகுதிகளாக ஆவர் குறிப்பிடுவதி-லிருந்து இதனை அறியலாம் (நூ. 73).

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புக்களில் ஏற்பன அமைந்து வினைச்சொல் அமையும் என்று பவணந்தி, வைத்தியநாத தேசிகர், சாமி கவிராசன் ஆகியோர் கூறுவர் (நூ. 133; 42; 23). இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சுவாமிநாத தேசிகர் பகுபதத திலக்கணம் பகருங்காலை என்று விளக்கு-மிடத்துச் சாரியையும் அமைந்து வருமென்று கூறுவார் (நூ.117). ஆனால் எவ்விடத்தில் வருமென்று தெளிவாகச் சுட்டவில்லை. பவணந்தி, வைத்தியநாத தேசிகர், சாமி கவிராசன் ஆகிய மூவரும் இடைநிலைக்கும் விகுதிக்குமிடையே வினையில் வரும் சாரியை அமையும் என்று சுட்டுவர். ஆனால் எல்லா வினைச்சொற்களும் கண்டிப்பாகச் சாரியை பெற்றிருக்க வேண்டுமென்ற நியதி இல்லை என்று கூறியுள்ளனர். இதனை

> "பகுதி விகுதி இடைநிலை சாரியை
> சந்தி விகார மாறினு மேற்பவை
> முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும் — ந. 133.

> "பகுதி விகுதி இடைநிலை சாரியை
> சந்தி விகார மாறினு மேற்பவை
> முன்னிப் புணர்த்தது முடித்தனர் கொளலே — இ வி. 42

> "... ... ... பகுதி விகுதி
> இடைநிலையே சாரியை சந்தி விகாரம்
> பழுத்த கருவிகளின் ஏற்பன கொண்டு முடியும்" — சு. 23

என்னும் நூற்பாக்களில் வரும் 'ஏற்பவை முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்', 'ஏற்பவை முன்னிப் புணர்த்தது முடித்தனர் கொளலே 'ஏற்பன கொண்டு முடியும் என்று அமையும் சொற்றொடர்கள் அறிவுறுத்தும்.

மேற்கண்ட இலக்கண நூற்களும் சாரியை வினையில் அமையும் என்கின்றனவே ஒழிய எந்தெந்த சாரியைகள் வினையில் அமையு-மென்று தொகுத்தளிக்கவில்லை. உரைகாரர் வழிநின்று எந்தெந்தச் சாரியை வினையில் அமையுமென நிர்ணயிக்க இடமுள்ளது. தொல்-காப்பியத்தில் நச்சினார்க்கினியர் ''க, ட, த. ற என்றும் காலவெழுத்தின் முன் அம் விகுதி அன் பெற்றும் ஆம் விகுதி அன் பெருதும் வரு-மென்பார்'' (தொ. கொ. 2J+). அவரே ''அகரம் இறந்தகாலம் பற்றி வருங்கால் க, ட, த, ற என்னும் அந்நான்கின் முன் அன் பெற்றும் பெறாததும், ஏனை எழுத்தின் முன் ஙகார ழகாரம் ஒழிதது இன் பெற்றும்'' வருமென்பார் (நூ. 218). நன்னூலில் சிவஞான முனிவர் 'அ' என்னும் சாரியை அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்றில் அமையும் என்பார் (நூ 145) அதே கருத்தை வைத்தியநாத தேசிகரும் கூறியுள்ளார் (நூ. 52). தொன்னூல் விளக்-கத்தில் வீரமா முனிவர் உகரக் கிளவியை ஒன்றன்பால் விகுதியாகக் கொள்வதால் 'அத் என்பதை அந்நூல் சாரியையாகக் கொள்வது புலனாகிறது. (நூ. 105). ஆனால் இச்சாரியை பற்றிய குறிப்பு எதுவும் அந்நூலில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வினையில் வரும் சாரியைகள் அன், இன், அ என்றும் மூன்று என உரை வாயிலாக அறியலாம்

எ.டு:- 1) வந்தன — வா + ந்த் + அன் + அ

2) கழலினன் — கழல் + இன் + அன்

3) வந்தது — வா + ந்த் + அ + து

வினையில் வரும் சாரியைகளுக்குப் பொருளுண்டா என்று கீழே காணலாம். வினைவிகுதிகள் உணர்த்தும் பொருள் பால் என மரபிலக்-கணங்கள் கூறும். பால் எழுவாயிலேயே புலப்பட்டுவிடும். எனவே ஒருசெய்தி இருமுறை ஒரு வாக்கியத்திலேயே அமையக் காரணம் என்ன என ஆராயின், அவ்விகுதி பாலோடு வேறு பொருளையும் உணர்த்த வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.

1) மாதவி படித்தாள், இருந்தும் தேர்வில் வெற்றிபெறவில்லை.

2) மாதவி படித்திருந்தாள். இருந்தும் தேர்வில் வெற்றிபெற-வில்லை.

மேற்கண்ட இரண்டு வாக்கியங்களும் ஒரே பொருண்மையனவாகக் காணப்படுகின்றன. முதல் வாக்கியத்தில் காணப்படும் 'ஆள்' விகுதிக்கு இணையாக இரண்டாம் வாக்கியத்தில் 'இருந்தாள்' என்னும் உறுப்பு அமைகிறது. இருந்தாள் என்பதில் [இருப்பு + காலம் + (ஆண்பால்)] ஆகியன காணப்படுகின்றன. ஆதலின் அப்பொருண்மைகளை முந்தைய வாக்கியத்தில் காணப்படும் 'ஆளுக்கும் ஏற்றிக் கூறுவதில் தவ-றொன்றுமில்லை.

முற்று விகுதிகளின் பொருண்மையமைப்பு [இருப்பு + காலம் + பால்] என்று கொண்டால், சாரியையுடன் கூடிய குறிலுயிரை முதலாக உடைய விகுதிகளிலும் அப்பொருண்மை இருப்பதாகக் கூற வேண்டும். சாரியையிற்குப் பொருள் தராமல் மூன்று பொருள்களையும் விகுதிக்கே தருவதை விட ஒருபொருள் அதாவது இருப்புப் பொருளைச் சாரியையிற்குக் கொடுப்பது நல்லது. எனவே வினையில் வரும் சாரியைகளுக்குப் பொருளுண்டு என்று கொள்ளலாம்.

இக்கட்டுரை வாயிலாக வினையில் வரும் சாரியைகளும் உண்டு என்றும், அச்சாரியைகள் அன், இன், அ என்பன என்றும், அச்-சாரியையும் பொருளுணர்த்தும் வடிவமே என்றும் அறியலாம்.

குறிப்புக்கள்

1) தொல்காப்பியர், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், பிரயோக விவேகம், இலக்கண விளக்கம் இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்பன தமிழ் இலக்கண நூற்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்க எண்பதாம் ஆண்டு விழாவும் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் நினைவு நாளும் :

—0—

மதுரைத் தமிழ்ச் சங்கம் தனது எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவையும் பாண்டித்துரைத் தேவர் நினைவு நாளினையும் 1980 - நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் சிறப்புறக் கொண்டாடியது. தமிழ்ச் சங்க மாளிகைக்கு முன்னர் அமைந்துள்ள திறந்த வெளி அரங்கம் அழகுற அலங்கரிக்கப் பெற்றிருந்தது. விழாவிற்கு வருவோர் அனைவருக்கும் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இலக்கிய அன்பர்களும், பொது மக்களும் நூற்றுக் கணக்கில் கூடியிருந்தனர். சங்கத்திறகு வெளியிலும் சாலையின் இருமருங்கிலும் கூடியிருந்தோருக்கு நிகழ்ச்சிகள் தெளிவாகக் கேட்கும் வண்ணம் ஒலி பெருக்கி வசதி சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தது.

செந்தமிழ்க் கல்லூரி மாணவியர், கியூன்மேரி, சரோஜா ஆகிய இருவரும் இறை வணக்கம் பாடிய பின்னர் கல்லூரித் தாளாளர் திரு. தனுக்கோடி பாண்டியன் அவர்கள் வரவேற்புரை நல்கினார்கள். கல்லூரிக் குழுவின் உறுப்பினர் திரு. வெ. இ. பரசுராம் அவர்கள் சொற்பொழிவாற்ற வந்திருந்த அறிஞர் அனைவருக்கும் பொன்னாடை போர்த்திப் பெருமைப் படுத்தினார்கள் அடுத்து பேராசிரியர். டாக்டர். மெ. சுந்தரம் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கம் நான்காம் தமிழ்ச் சங்கமாகுமா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமில்லை; சேது காவலரின் பாதுகாவலில் தோற்றுவிக்கப்பட்ட இச்சங்கமே தமிழின் பொற்காலத்தை உருவாக்கியது என்று உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்டார்கள். விழாவிற்கு வாழ்த்துரை நல்கிய திரு, கந்தசாமி அவர்கள் தமிழுக்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பினை எடுத்துக் காட்டினார்கள். காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமையேற்ற தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தமது உரையில் தமிழில் வழிபாடு நடத்துவதன் அவசியம் குறித்தும், இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை கட்டிக் காக்க வேண்டிய பொறுபபு தமிழர் தம் கடமை என்றும், தலைகொடுத்தும் ஆண்டவனின் ஆலயத்தைக் காளையார் கோவிலில் காப்பாற்றிய பெருமை மருதுபாண்டியருக்கு உண்டு என்றின்ன பற்பல செய்திகளை எடுத்துக் கூறினார்கள். கருத்தரங்கு நிகழ்ச்சியில் பேசிய பேராசிரியர். இராமன் அவர்கள் பாண்டித்துரைத் தேவர்

கூறினார்கள். வள்ளல் பாண்டித்துரை சங்கப் புலவராக இருந்த திரு. நாராயண அய்யங்காருக்குச் சிறந்த வீடு கட்டித்தர ஏற்பாடு செய்தார்கள். அந்த உதவியினை மறவாத அய்யங்கார் தமக்கு அண்ணாமலை நகரில் கிடைத்த பதவியினை ஏற்றுக் கொள்ளாமல் சங்கத்துக்கே தொண்டாற்றினார்என்று நினைவுபடுத்தினார்கள். நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசிய பாலகவி. வயிநாகரம் இராமநாதன் செட்டியார் அவர்கள் இராமநாதபுரசமஸ்தானம் தமிழும்இசையும்எப்படி வளர்ந்தது என்று விளக்கமுறக் கூறினார்கள். இசைவல்லுநரான அரியக்குடி இராமானுசஅய்யங்காரின் குருவாகிய பூச்சி அய்யங்கார் சேது மன்னரால் ஆதரிக்கப் பெற்றவர் என்றும் குறிப்பிட்டார்கள். பழைய நினைவுகள் குறித்தும் இலக்கியத் தொடர்பு பற்றியும், நான்காம் தமிழ்ச்சங்கம் தமிழ் வளர்த்த சால்பு குறித்தும் மகாவித்வான். ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் வித்வான் வெள்ளைவாரணம் அவர்களும் சிறப்புறச் சொற்பெருக்காற்றினர். காலையிலும் மாலையிலும் நடந்த இந்த இலக்கியப் பெருவிழாவிற்கு வந்திருந்த அனைவரும் இறுதிவரை கலையாமல் நிகழ்ச்சியினைச் சிறப்பித்தனர். செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்: உயர்திரு. இரா. வே. நாராயணன் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள். நாட்டுப்பண்ணுடன் விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறின.

—ஆசிரியர்

தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்புகள் மற்றும் தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள் :

1979 - 80 ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும், மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும் சென்னை, மதுரை பல்கலைக் கழகக் கல்லூரிகளையும் சார்ந்த இளங்கலை முதலாண்டு, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் கல்லூரியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூற்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் சார்பில் வாழ்த்துகின்றோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் கல்லூரி முதல்வர்களுக்கும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும், உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும், பிறஅன்பர்களுக்கும், எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்

— 0 —

உயர் நிலைப்பள்ளி 10 - ஆம் வகுப்புத் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்

வ. எண்.	மாணவர் பெயர் பள்ளி முகவரி	மதிப் பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
				ரூ.
1.	ச. கதிர் (10950) ஏ வி எம். மாரிமுத்து நாடார் உயர்பள்ளி விளாம்பட்டி - 626158. சிவகாசி (வழி)	177/200	முதல் பரிசு	100
2.	சா அற்புதராசு தமிழ்ச் செல்வன் (13287) அரசினர் உயர்பள்ளி, உசிலம்பட்டி, மதுரை.	176/200	2-ம் பரிசு	50
3.	பா. ஞானமாணிக்கம் (14575) தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல், மதுரை.	174/200	3-ம் பரிசு	25
4.	ஆர். சௌந்திர ராணி (7682) அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, திருப்பத்தூர்.	173/200	ஆறுதல் பரிசு	10
5.	வே. கிரகலெட்சுமி (10951) ஏ.வி.எம். மாரிமுத்துநாடார் உயர்பள்ளி விளாம்பட்டி.	173/200	”	1
6.	எம். பத்மாவதி (7672) அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, திருப்பத்தூர்.	171/200	”	10

7.	வி. வேணி (18652) கேப்ரன்ஹால் மேனிலைப்பள்ளி, மதுரை.	169/200	ஆறுதல் பரிசு	10
8.	எஸ். சந்திரா (8540) கண்ணகி அரசினர் உயர்நிலைப் பள்ளி, வில்லியனூர், பாண்டிச்சேரி.	168/200	,,	10
9.	கே. மேகலா (2484) அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, நாமக்கல், சேலம்.	168/200	,,	10
10.	கே. சித்ரா (6443) என்.எல்.சி. பெண்கள் மேனிலைப் பள்ளி, நெய்வேலி.	168/200	,,	10
11.	பி. அன்னம் (865) சாரா டக்கர் மேனிலைப்பள்ளி, பாளையங்கோட்டை.	167/200	,,	10
12.	நா.சி. கண்ணன் (3935) புதுக்கோட்டை முன்மாதிரி மேனிலைப்பள்ளி, புதுக்கோட்டை,	167/200	,,	10
13.	ராதிகா (4547) தூய வளனார் பெண்கள் மேனிலைப் பள்ளி, பூக்காரத் தெரு, தஞ்சை.	167/200	,,	10
14.	ஜே. இரகுநாதன் (16588) ஐக்கிய கிறித்தவ உயர்பள்ளி, மதுரை.	167/200	,,	10

மேல் நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்.

1.	ஆர். கீதா (8057) டாக்டர் அழகப்ப செட்டியார் மேனிலைப்பள்ளி, காரைக்குடி.	176/200	முதற் பரிசு	50

2.	டி.வி. காயத்திரி (12922) அரசினர் மேனிலைப்பள்ளி, மதுரை.	176/200	முதற் பரிசு	50

முதற்பரிசுத் தொகை ரூ. 100/-ஐ ஒரே மதிப்பெண் பெற்ற இரு மாணவியருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

3.	ஆர். சுந்தர் (8006) டாக்டர் அழகப்ப செட்டியார் மேனிலைப்பள்ளி, காரைக்குடி.	175/200	2-ம் பரிசு	50
4.	கே. பத்மாவதி (12928) அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, மதுரை.	166/200	3-ம் பரிசு	15
5.	வே பாரி (10181) திரு கிருட்டிணய்யர் உயர்பள்ளி, சின்ன ப ஞூர்.	166/200	3-ம் பரிசு	15

(மூன்றாம் பரிசுத் தொகை ரூ. 25-உடன் ரூ. 5 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இரு மாணவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது)

6.	கே. அனந்தஸ்ரீ (5391), இந்து மேனிலைப்பள்ளி, ஆம்பூர்	165/200	ஆறுதல் பரிசு	10
7.	எம் உமா (5393), இந்து மேனிலைப்பள்ளி, ஆம்பூர்	163/200	”	10
8.	எஸ். முரளி (8015), டாக்டர் அழகப்ப செட்டியார் மேனிலைப்பள்ளி, காரைக்குடி	162/200	”	10
9.	கு. நிர்மலா (2592), அரசினர் மேனிலைப்பள்ளி, சின்னத் தாராபுரம்	157/200	”	10

10. ப விசயன் (5166), அரசு மேனிலைப்பள்ளி, தேரூர்	156/200	ஆறுதல் பரிசு	10
11. ஜி கே. சிவனாத் (13704) சௌராஷ்டிரா உயர்பள்ளி, மதுரை	156/200	”	10
12. க. இராமசாமி (12621) தியாகராசர் நன்முறை உயர்பள்ளி, மதுரை	156/200	”	10
13. மு. கருப்பச்சாமி (10014) தூய மரியன்னை மேனிலைப்பள்ளி, திண்டுக்கல்.	155/200	”	10
14. சு. சந்திரா (10189) திரு கிருட்டினய்யர் உயர்பள்ளி, சின்னமன்னூர்	155/200	”	10
15. ஆ. சுப்பம்மாள் (154) எஸ். எம். எஸ். மேனிலைப்பள்ளி, சுசீந்திரம்	154/200	”	10
16. வி. லெட்சுமி நாராயணன் (13314) மதுரைக் கல்லூரி மேனிலைப்பள்ளி, மதுரை	154/200	”	10

மதுரைப் பல்கலைக் கழகம்

இரண்டாம் பருவத் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்

வ. எண்.	மாணவர் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப் பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1.	மாலினி அன்புடையன் (609) பெண்கள் கிருத்துவர் கல்லூரி, நாகர்கோவில்	66/100	முதற் பரிசு	100
2.	பி.எஸ்.ஜெயந்தி (303) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி	59/100	2-ம் பரிசு	50
3.	சாந்தி நட்சத்திரம் (44) ஏ. பி. சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி தூத்துக்குடி — 2	57/100	மூன்றாம் பரிசு	25

நான்காம் பருவத்தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்.

4.	ஐ. சுசிலாபானு (446) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி பழனி	56/100	முதற் பரிசு	100
5.	எல். திலகவதி (368) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி	55/100	2-ம் பரிசு	50
6.	மு. தமிழரசி (142) ஏ பி. சி மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி	53/100	3-ம் பரிசு	25

சென்னைப் பல்கலைக் கழகம்

இரண்டாம் பருவத் தேர்வில் ரொக்கப் பரிசுபெற்ற மாணவர்கள் விபரம்

வ எண்.	மாணவர் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப் பெண்	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1.	கே. ஜோதி (2108) அரசினர் மகளிர் கலைக் கல்லூரி புதுக்கோட்டை	64/100	முதற் பரிசு	100
2.	இரா. சரசுவதி (2073) அரசினர் கலைக் கல்லூரி திருச்சி.	62/100	இரண்டாம் பரிசு	25
3.	ஆர். மலர்விழி (2029) பிராவிடன்சு மகளிர் கல்லூரி குன்னூர்-4	62/100	,,	25
4	(இரண்டாம் பரிசுத் தொகை ரூ 50/-ஐ ஒரே மதிப்பெண் பெற்ற இருவருக்கும் பிரித்துக் கொடுக்கப் படுகிறது)			
4	எஸ். இராஜேஸ்வரி (2 57) அரசினர் மகளிர் கல்லூரி புதுக்கோட்டை	6/100	மூன்றாம் பரிசு	15
5.	செ. தேவிகா (2077) அரசினர் கலைக் கல்லூரி, திருச்சி	6/100	மூன்றாம் பரிசு	15

மூன்றாம் பரிசுத் தொகை 25/- உடன் ரூ. 5/- சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இருவருககும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

நான்காம் பருவத் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் விபரம்

1.	சு. உஷா (2565) புனித சிலுவை கல்லூரி திருச்சி	72/100	முதற் பரிசு	100
2.	த. சாந்தி (2394) புனித சிலுவைக் கல்லூரி, திருச்சி	70/100	2-ம் பரிசு	50
3.	ஆர் புவனேஸ்வரி (2294) அரசினர் மகளிர் கலைக் கல்லூரி புதுக்கோட்டை	69/100	3-ம் பரிசு	25

தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர்! வணக்கம்.

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள், புகழ் பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிகஉயர்ந்த-தாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை-கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்து புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் தமிழ் மொழிக்கூடம் ஒன்றை நிறுவினார். இன்றைக்குக் கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர், இம்-மொழிக்கூடத்தில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்குத் திருவுருவச் சிலை

பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிச் சிறப்புற நடத்தினார் என்பதை உணர்ந்து உவகை கொண்ட தமிழக அரசு நடைபெற இருக்கும் நான்காவது உலகத் தமிழ்மாநாட்டில் அன்னாருக்குத் திருவுருவச்சிலை அமைக்க எடுத்திருக்கும் நல்ல முடிவைத் தமிழன்பர்களாகிய நாம் வரவேற்றுப் பாராட்டுகின்றோம். இதன் மூலமாகத் தமிழன்பர்களின் நீண்டநாளைய கனவு நனவாக்கப்பட்டிருக்கின்றது அரசுக்கு நாம் அனைவரும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தேர்வின் அமைப்பும் பயனும்:

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள், கல்லூரி மாணவர்கள் முறையே பொதுத் தேர்வுகளிலும் பல்கலைக்கழகத் தேர்வுகளிலும் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் தொடங்கிய தமிழ்த் தேர்வு கடந்த 79 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிலுள்ளஉயர்நிலை மற்றும்மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செவ்வனே நடத்தப்பெற்று வருகிறது. இத்தேர்வுகளில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

சென்ற ஆண்டு மேல்நிலைப்பள்ளி இரண்டாமாண்டு மாண-வர்களும் பயன் பெற அவர்களுக்கும் தேர்வு நடத்தி வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்-களுக்கு அரசும் பல்கலைக் கழகமும் வகுத்துள்ள தமிழ்ப் பாடப் பகுதி-களே தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வுக்கும் உரிய பாடப்பகுதிகளாகும். அரசும் பல்கலைக் கழகமும் எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கும் (PUBLIC EXAMINATION) பல்கலைக் கழகத் தேர்விற்கும் முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்ணைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கும், பல்கலைக் கழகத் தேர்விற்கும் நன்முறையில் தங்களை தயார் செய்துகொள்ள தமிழ் சங்கத் தேர்வு பெரும் வாய்பபளிக்கின்றது.

சான்றிதழும் சிறப்புப் பரிசும்

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் மேல்நிலைப்பள்ளியிலும் கல்லூரியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப் படுகின்றன அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் நாற்பத்தி நான்கு மாணவர்கள் ரொக்கப் பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்-கிறோம். ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள், தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' டிசம்பர், 1980 மாத இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச்சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்-களுக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம் :-

உயர் நிலைப்பள்ளி
மேல்நிலைப்பள்ளி

வகுப்பு	தேர்வுக் கட்டணம்	தேர்வு நாள்	தேர்வு நேரம்
உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு	ரூ. 3.00	14-2-81	முதல்நாள் 10—12.30 இரண்டாம் தாள் 2—4-30
மேல் நிலைப்பள்ளி இறுதியாண்டு பொதுத்தமிழ்	ரூ. 3.50	21-2-81	முதல்தாள் 10—1 இரண்டாம் தாள் 2—5
சிறப்புத் தமிழ்	ரூ. 2.25	23-2-81	10—1

கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதிநாள் 20-1-81

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரிகள்

வகுப்பு	தேர்வுக் கட்டணம	தேர்வு நாள்	தேர்வு நேரம்
பட்டவகுப்பு முதலாண்டு 2-ம் பருவத்தேர்வு	ரூ. 2.50	21-3-81	10—1
" 2-ம் ஆண்டு 4-ம் பருவத்தேர்வு	ரூ. 2.50	21-3-81	10—1

கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதிநாள் 28-2-81

தேர்வு நடத்துவதற்காகப் பிடித்துக் கொள்ள வேண்டிய செலவுத் தொகை

15 மாணவர்களுக்கு மேல் தேர்வெழுதும் உயர்நிலைப் பள்ளிகள் / மேல்நிலைப் பள்ளிகள் / கல்லூரிகள் மொத்தத் தேர்வுக் கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 15 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளி / கல்லூரிகள் செலவுத் தொகை ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத் தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும் அனைத்துச் செலவிற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செலவானால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மாணவர் பெயர்ப் பட்டியலோடு விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியல், வரவு செலவுப் பட்டியல் முதலியவற்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அன்பளிப்பு

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகையினை சென்ற ஆண்டு முதல் தாள் ஒன்றிற்கு, பின்வருமாறு உயர்த்தப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

உயர்நிலைப்பள்ளி - பத்தாம் வகுப்பு	ரூ,	0 75 காசு
மேல்நிலைப்பள்ளி - இறுதியாண்டு	,,	0.90 காசு
கல்லூரி	,,	1.00 ரூபாய்

இவ்வன்பளிப்பு உயர்வு தமிழ்த்துறையைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்பதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம்.

அன்பு வேண்டுகோள்

கடுமையான நிலையில் விலைகள் உயர்ந்துள்ள போதிலும் மாணவர்களின் நலன் கருதித் தேர்வுக் கட்டணத்தைச் சிறிதும் உயர்த்தாது தேர்வுப்பணிகள் சிறப்புடன் நடைபெற்று வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே அறிந்திட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கின்றோம் ஆகையால் தேர்வு அறிக்கை கிடைத்தவுடன் அத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள பாரத்தில் உங்கள் பள்ளியிலிருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் பாரம் கிடைத்த உடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பதிவுப் பட்டியலும் (2) வரவு-செலவுப் பட்டியலும் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப் பட்டியலும் 4) கால அட்டவணை தேர்வுக் கட்டணம். தேர்வுச் செலவிற்குப் பிடித்துக்கொள்ளும் தொகை விபரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் தேர்வில் கலந்துகொள்ள இயலவில்லையென்றாலும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு :- R. Dis. 166528/65 dated 22—12—65 என்ற ஆணையின் (G.O.) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625001.

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

மதுரை-1

20.12.80

தங்கள் அன்புள்ள
T.P.M. பெரியசுவாமி
செயலாளர்.

மணியம் பிரஸ்,
44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு.
மதுரை-9.